මුදල් කොමිෂන් සභාව

நிதி ஆணைக்குழு

Finance Commission

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154ජ ව්‍යවස්ථාවේ (4) (අ) අනුව්‍යවස්ථාව ප්‍රකාරව
2026 වර්ෂය සඳහා

ගරු ජනාධිපතිතුමා වෙත ඉදිරිපත් කරනු ලබන නිර්දේශ

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்
154ண உறுப்புரையின் (4) (அ) உப பிரிவின் பிரகாரம்
2026 ஆம் ஆண்டிற்காக

கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகள்

RECOMMENDATIONS SUBMITTED TO THE HON. PRESIDENT

In terms of Sub Article 4 (a) of Article 154R of the Constitution of the
Democratic Socialist Republic of Sri Lanka
for the year 2026

2025 ඔක්තෝබර්

2025 ஒக்டோபர்

October 2025

මුදල් කොමිෂන් සභාව
(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 "ඊ" ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)
நிதி ஆணைக்குழு
(அரசியலமைப்பின் 154 "ண" ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டது)
FINANCE COMMISSION
(Established under Article 154 "R" of the Constitution)

03, සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 03, சரண மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
03, Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka.

මගේ අංකය / எனது இல. / My No.: FC/PSR/07/01/2026

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2025.10.31

கௌரவ அனுர குமார திசாநாயக்க அவர்கள்
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி
சனாதிபதி அலுவலகம்
கொழும்பு 01.

கௌரவத்திற்குரிய ஜனாதிபதி அவர்களே,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது உறுப்புரை 154ண இன் (4)(அ) இற்கிணங்க 2026 ஆம் ஆண்டிற்காக தேசிய பாதீட்டினால் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி, நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடைந்து கொள்வதனை நோக்கமாகக் கொண்டு மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும் போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள் தொடர்பில் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டிய நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் 4ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் அரசினது ஒட்டுமொத்த அபிவிருத்தி மூலோபாயத்திற்கு குறைநிரப்பும் வகையில் அரசினால் செயற்படுத்துவது உசிதமாகும் எனத் தோன்றும் பரிந்துரைகள் சில இதன் 5ஆவது அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3) பிரகாரம் நிதி ஆணைக்குழுவினால் ஒவ்வொரு மாகாணத்தினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2026 ஆண்டிற்காக தேசிய பாதீட்டினால் குறித்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி தொடர்பில் பொது திறைசேரிக்கு 2025 08.14 ஆந்திகதி முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளும் இதன் 3ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையினை தங்களின் கவனத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்.

இப்படிக்கு விசுவாசத்திற்குரிய,

சுமித் அபேசிங்ஹ
தலைவர்
நிதி ஆணைக்குழு

සභාපති / தலைவர் / Chairman: (+94)011 2866724
ලේකම් / செயலாளர் / Secretary: (+94)011 2866824
කාර්යාලය / அலுவலகம் / Office: (+94)011 2866747
ෆැක්ස් / தொலைநகல் / Fax: (+94)011 2866671, (+94)011 2866679
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail: info@fincom.gov.lk
www.fincom.gov.lk

நிதி ஆணைக்குழு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்
154ண உறுப்புரையின் (4) (அ) உப பிரிவின் பிரகாரம்
2026 ஆம் ஆண்டிற்காக

கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகள்

2025 ஒக்டோபர்

பொருளடக்கம்

உள்ளடக்கம்	**பக்க எண்**
01. அறிமுகம்	*01 - 03*
02. மாகாண சபைகளுக்கு நன்கொடை வழங்குதல்	*04 - 10*
03. 2026 ஆம் ஆண்டிற்கான மாகாணங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல்	*11 - 21*
04. 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளுக்கிடையே அரச மானிய நிதியை பகிர்ந்தளிப்பது தொடர்பான பரிந்துரைகள்	*22 - 30*
05. விசேட பரிந்துரைகள்	*31 - 41*

பின்னிணைப்புக்கள்

பின்னிணைப்பு I: எதிர்பார்க்கும் வருமானத்தில் 50% இனை ஈடுசெய்ததன் பின்னர் பரிந்துரைக்கப்பட்ட மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல் – 2026

பின்னிணைப்பு II: 2026 ஆம் ஆண்டின் மாகாண அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் – மேல் மாகாணம்

அத்தியாயம் 1

அறிமுகம்

1.1. பின்னணி

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154ண உறுப்புரையின் (4) (அ) உப பிரிவின் பிரகாரம் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் இவ்வறிக்கையில், 2026 ஆம் ஆண்டுக்காக அரசினால் தேசிய பாதீட்டிலிருந்து மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் உள்ளடங்குகிறது. அரசியலமைப்பின் உறுப்புரை 154ண உறுப்புரையின் (5) ஆவது உப பிரிவின் பிரகாரம், நாட்டினுள் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் நோக்குடன் அக்கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.அதேபோன்று , அரசியலமைப்பின் உறுப்புரை 154ண உறுப்புரையின் (3) ஆவது உப பிரிவின் பிரகாரம் அரசினால் மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டு செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்காக மாகாண சபைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைக்காக போதியளவு நிதி தொடர்பாக ஏற்கனவே அரசிற்கு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள விடயங்களுக்குரிய சேவைகளை மிகவும் வினைத்திறனுடன் வழங்குவதற்காகவும், சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் மாகாண சபை முயற்சியினை வெற்றிகரமாக்குவதற்கும் இருக்க வேண்டிய அரசின் தலையீடு தொடர்பிலான பரிந்துரைகள் சில இதன் 5ஆவது அத்தியாயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

1.2. நிதி ஆணைக்குழுவினதும் அதன் அரசியலமைப்பு ஆணையினதும் உருவாக்கம்

அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படுவதன் மூலம் மாகாண சபைகளை தாபிப்பதற்காக 1987 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் நிதி ஆணைக்குழுவும் தாபிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது நாட்டின் மொத்த நிலப்பரப்பு மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படுமாறு ஒன்பது மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. இச்சூழ்நிலையில், அரசின் வருடாந்த பாதீட்டினால் மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக போதியளவு நிதியினை வழங்குதல் மற்றும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை குறைத்து சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடைவதனை நோக்கமாகக் கொண்டு அந்நிதியினை நியாயமான முறையில் மாகாணங்களுக்கிடையே பகிர்வதனை இலகுபடுத்துவதற்காக நிதி ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது.அதன்போது, மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி தொடர்பாக நிதி ஆணைக்குழுவினால் அரசிற்கு பரிந்துரைகள் முன்வைக்கப்படுவதோடு, நிதி ஆணைக்குழுவை விசாரித்து அரசினால் அந்நிதி வழங்கப்பட வேண்டியுள்ளது.

அதேபோன்று,மேற்கூறியவாறு மாகாணங்களின் தேவைகள் தொடர்பாக அரசின் வருடாந்த பாதீட்டினால் மானியமாக வழங்கப்படும் நிதியினை பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் குறைவடையுமாறு சமமான பிராந்திய அபிவிருத்தியினை அடைந்து கொள்ளும் நோக்கத்துடன் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கும்போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள் தொடர்பாக ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைப்பது அரசியலமைப்பினால் நிதி ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள முதன்மைப் பணியொன்றாகும். மேலும், மாகாணங்களின் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி அவர்களினால் நிதி ஆணைக்குழுவிற்கு நெறிப்படுத்தும் வேறு சில விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதும் நிதி ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3), (4) மற்றும் (5) ஆகியவற்றினால் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ள நிதி ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

உறுப்புரை 154ண (3) : *மாகாணங்களின் தேவைகளைச் சமாளிக்கும் நோக்கத்திற்காக, பொதுவான அத்தகைய நிதியங்களை அரசாங்க ஆணைக்குழுவின் விதப்புரை மீதும் அதன் கலந்தாலோசனையுடனும் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து குறித்தொதுக்குதல் வேண்டும்.*

உறுப்புரை 154ண (4) :

(அ) மாகாணங்களின் பயன்பாட்டிற்கென அரசாங்கத்தினால், ஆண்டு தோறும் வழங்கப்படுவனவான அத்தகைய நிதிகள், எந்நெறிகளின் மீது பல்வேறு மாகாணங்களுக்கிடையில் பங்கிடப்படுதல் வேண்டுமோ அந்நெறிகள் பற்றியும் : அத்துடன்

(ஆ) மாகாண நிதி நிலையம் தொடர்பாக சனாதிபதியினால் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் வேறு ஏதேனும் கருமம் பற்றியும் ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைப்பது நிதி ஆணைக்குழுவின் பணியாகும்.

உறுப்புரை 154ண (5) : *ஆணைக்குழு, நாட்டின் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை எய்தும் நோக்கத்துடனான அத்தகைய நெறிகளை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க பின்வருவனவற்றை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:-*

(அ) ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை

(ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானம்

(இ) பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மைகளைப் படிப்படியாக க் குறைப்பதற்கான தேவை : அத்துடன்

(ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானத்திற்கும், மாகாணங்களுக்கிடையிலான அதியுயர் தலைக்குரிய வருமானத்திற்குமிடையேயான வித்தியாசத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை.

மேலும், ***உறுப்புரை 154ண (7)*** *இன் படி "சனாதிபதி, இந்த உறுப்புரையின் கீழ் நிதி ஆணைக்குழுவினால் செய்யப்படும் விதப்புரை ஒவ்வொன்றையும் பாராளுமன்றத்தின் முன்னர் இடச்செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவித்தலும் வேண்டும்." எனக் கோருகின்றது.*

1.3. நிதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்

அரசியலமைப்பின் 154 ண (3), (4) மற்றும் (5) உறுப்புரைகளுக்கமைய, மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதி வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கப்படுவது தொடர்பாக அரசிற்கு பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் நாட்டினுள் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை எட்டும் நோக்கத்துடன் அந்நிதியானது மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் தொடர்பாக மற்றும் மாகாணங்களின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி அவர்களினால் நிதி ஆணைக்குழுவிற்கு வழிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் விடயம் காணப்படின் அது தொடர்பான பரிந்துரைகளை ஜனாதிபதி அவர்களிடம் முன்வைப்பது நிதி ஆணைக்குழுவின் முதன்மைப் பணியாகும்.

மேற்குறிப்பிட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுகையில் நிதி ஆணைக்குழுவினால் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மாகாணங்களின் வருடாந்த மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பிடும் நடவடிக்கைக்காக தகவல்களை முன்வைப்பது தொடர்பில் மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை வெளியிடல்.

ii. மாகாணங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை ஆராய்ந்து மாகாண அதிகாரிகளுடனான விரிவான கலந்துரையாடலின் பின்னர் குறிப்பிட்ட தேவைகளை மதிப்பிடல்.

iii. மாகானகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதியினை வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கப்படுவதற்காக அரசிற்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

iv. மாகாணங்களின் தேவைகளுக்காக அரசினால் வழங்கப்படும் நிதியினை ஒன்பது மாகாணங்களுக்குமிடையே பகிர்ந்தளிக்கும் போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள் தொடர்பில் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

v. வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கப்படும் நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல் மற்றும் மாகாணத்தின் பல்வேறு துறைகளுக்கு பகிர்ந்தளித்தல்.

vi. நிதிப் பயன்பாட்டின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில் வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.

vii. அனைத்து தொடர்புபட்ட உரித்தாளர்களினதும் பங்குபற்றலுடன் மாகாண அபிவிருத்தி திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அவசியம் எனத் தென்படும் திருத்தங்களுக்குட்பட்டு அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்குதல்.

viii. மாகாண ஆளணி எண்ணிக்கை முகாமைத்துவம் தொடர்பில் அரசிற்கு பரிந்துரைகளை வழங்குதல்.

அத்தியாயம் 2

மாகாண சபைகளுக்கு நன்கொடை வழங்குதல்

2.1. அதிகாரப் பரவலாக்கத்தின் சட்ட மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினுள் மாகாணங்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளல்

இலங்கையின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினால் 1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறை மூலம் நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. அதன்படி, இலங்கை நிர்வாகக் கட்டமைப்பில் அரசாங்கம் (மத்தி), மாகாண சபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகள் ஆகிய மூன்று தனித்துவமான ஆட்சிப் படிநிலைகள் உருவாகின. அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு இணைவாக, மாகாண சபைகளின் செயற்பாடு இலகுபடுத்தப்படுவதற்காக 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின்படி, மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டவாக்க அதிகாரம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நிதி அதிகாரம் ஆகிய பகுதிகளை வரையறுத்து பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சி நிறுவப்பட்டது. மத்தி மற்றும் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் விடய உள்ளடக்கம், அதன் 9 வது அட்டவணையில் 3 பட்டியலாக காட்டப்பட்டுள்ளது.அதற்கமைய, மாகாண சபைகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளின் பட்டியல் எனவும் அரசாங்கத்தின் பால் உள்ள அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட பட்டியல் எனவும் அரசாங்கம் மற்றும் மாகாண சபைகள் இணைந்து பொறுப்பேற்றுள்ள விடயங்கள் ஒருங்கியை பட்டியல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபைகளினால் நேரடியாக சேகரிக்கப்படும் வருவாய்களின் மூலங்களைப் பற்றிய விபரங்களும் மாகாண சபைகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மாகாண சபைகள் அதன் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்திக்கொள்ளும் என எதிர்பார்ப்பினும், அவ்வருமானம் மாகாண சபைகளின் மொத்த நிதித்தேவையுடன் ஒப்பிடுகையில் மிகச்சிறிய அளவினாலானதாகும். ஆகையால், மாகாண சபைகளின் சேவைகளை எவ்விதத் தடையுமின்றி வழங்குவதற்குத் தேவையான போதியளவு ஒதுக்கீடு பாதீட்டினால் ஒதுக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பினால் பரிந்துரைக்கப்பட்டுளது.

இலங்கையின் உள்ளூரதிகார சபை முறை மூன்றாவதும் கீழ்மட்ட ஆட்சிப் படிநிலையும் ஆவதோடு, அப்படிநிலை மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய ஒன்றுக்கொன்று வேறுபட்ட மூன்று சட்டபூர்வ நிறுவனங்களை உள்ளடக்கியது. இந்த நிறுவனங்கள் முறையே 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.அனைத்து உள்ளூரதிகார சபைகளுக்கும் சட்டவாக்கத்திற்கும் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும் ஒரு நிதியை பராமரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, சமூக நீர் வழங்கல், கழிவு முகாமைத்துவம் மற்றும் குறித்த உள்ளூராட்சியில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு சமூக சேவைகள் போன்ற அத்தியாவசிய உள்ளூர் பொது சேவைகளை வழங்குதல் ஆகியன உள்ளூரதிகார சபைகளின் முதன்மையான பொறுப்புக்களுக்குள் அடங்கும்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, உள்ளூரதிகார சபைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு குறித்த மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டது. உள்ளூரதிகார சபைகளுக்கு வருமானமீட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம்

காணப்படினும், அவர்களின் நிதித் தேவையினைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானளவில் வருமானம் இல்லாததன் காரணமாக இந் நிறுவனங்களின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு ஆகியவற்றுக்காக அரசினால் நிதி வழங்கப்படுகிறது. எவ்வாறாயினும், அரசினால் மாநகர சபைகளுக்கு இவ்வாறு வழங்கப்படும் நிதி 2024 ஆம் ஆண்டு முதல் தனிப்பட்ட ஊதியத்திற்கான செலவில் 80%ற்கு மட்டுப்படுத்தப்பட்டதோடு 2025 இல் மாநகர சபைகள் 60% ஆகவும் நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் 80% ஆகவும் மட்டுப்படுத்தியமைக்கான காரணம் அந்நிறுவனங்களின் வருமான அதிகரிப்பினை ஊக்குவிக்கும் நோக்கத்திலாகும்.

2.2 மாகாண சபைகளுக்கான நிதிப்பகிர்வின் போது நிதி ஆணைக்குழுவின் வகிபாகம்

அரசியலமைப்பிற்கு அமைவாக மாகாணங்களின் நிதித் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்குப் போதுமானளவு நிதி அரசினால் வழங்கப்பட வேண்டும் என்பதோடு, அந்நிதியானது நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை உருவாக்கும் நோக்கில் மாகாணங்களுக்கிடையே அறிவார்ந்த முறையொன்றினால் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதற்கமைய, இது தொடர்பாக நிதி ஆணைக்குழுவின் வகிபாகம் இருவகைப்படும்.

i. மாகாணத் தேவைகளைப் பகுப்பாய்வு செய்தல்

இலங்கையின் நடைமுறையிலுள்ள தேசிய கொள்கை சட்டகம் ,சுற்றறிக்கைகள், ஏற்பாடுகள்,நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் (SDGs), தேசிய மற்றும் மாகாண ரீதியில் முன்னுரிமையான விடயங்கள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் நிதித் தேவைகளை பகுப்பாய்வு செய்த பின்னர் நிதி ஆணைக்குழுவினால் மாகாணங்களின் நிதித் தேவை நிர்ணயிக்கப்படும்.

மாகாணத் தேவைகளை மதிப்பிடும் இந்நடவடிக்கையில், நிதி ஆணைக்குழு, மாகாணங்களுக்கு வழங்கும் படிவங்களைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல், வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல் ஆகியன உள்ளடங்கிய பரந்த செயற்பாட்டில் ஈடுபடுகின்றது. மேலும், மாகாணங்களின் வருடாந்த மொத்தத் தேவை தொடர்பாக மாகாண சபை அதிகாரிகள் மற்றும் தேசிய மட்ட நிறுவன அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு அனைத்து மாகாணங்களுக்குமான மொத்த பாதீட்டுத் தேவையினைத் தயாரித்து திறைசேரிக்கு பரிந்துரைகளை நிதி ஆணைக்குழு முன்வைக்கும்.

ii. சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை எய்துவதற்காக நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கான விஞ்ஞான ரீதியான வழிமுறையொன்றினை உருவாக்கல்.

தேசிய பாதீட்டினால் ஒதுக்கப்படும் நிதி மாகாணங்களுக்கிடையே அறிவார்ந்த அடிப்படையில் ஒதுக்கப்படுவதற்கான கொள்கைகள் நிதி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படுகிறது.இது தொடர்பாக இவ்வறிக்கையின் 4ஆவது அத்தியாயத்தில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. மாகாணத்தின் சமூக பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அனைத்து மாகாணங்களும் நியாயமான முறையில் நிதியினைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதே இச்செயன்முறையின் நோக்கமாகும்.

மாகாண சபைகளின் நிதித் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்து கொள்வதற்காக தேசிய பாதீட்டிலிருந்து நிதி ஒதுக்கிடுவதற்காக கீழ்வரும் மானிய நிதி வகைகளை நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

2.2.1 திரள் மானிய நிதி (Block Grant)

மாகாணங்களின் சேவை வழங்கும் அமைப்பினை தொடர்ந்து நடாத்திச்செல்வதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான செலவுகளை ஏற்றுக்கொள்வதற்காக வழங்கப்படும் மீண்டெழும் நிதி திரள் மானிய நிதி என அழைக்கப்படும். அரச சேவை ஆளணியினரில்

பெரும்பாலானவர்கள் மாகாண கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் ஈடுபடும் காரணத்தினால் மாகாண அரச சேவை ஊழியர்களின் தனிப்பட்ட ஊதியங்கள் திரள் மானிய நிதியின் முக்கிய கூறாகும்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால்(DMS) அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மாத்திரம் சம்பளம் மற்றும் ஊதியங்கள் மதிப்பிடப்படுவதோடு, நிதி ஆணைக்குழுவினால் விரிவான தேவை மதிப்பீட்டின் பின்னர் மாகாண சபைகளுக்குத் தேவையான நிதி பரிந்துரைக்கப்படும். இதற்கு மேலதிகமாக, உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி மாற்றல்கள், பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம், பராமரிப்பு செலவுகள், சமூக நலச் செலவுகள், பயணச் செலவுகள், விநியோகங்கள், ஒப்பந்தச் சேவைகள் ஆகியவற்றுக்கான செலவுகள் போன்றவையும் திரள் மானிய நிதியில் உள்ளடங்கும்.

2.2.2 மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி (PSDG)

மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்தி மூலதனம் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகளுக்கு மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி (PSDG) வழங்கப்படுகிறது. நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கமைய, ஒதுக்கப்பட்ட மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியினை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகளினால் ஒவ்வொரு வருடத்திற்குமான அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்படும். மாகாண அதிகாரிகள் மற்றும் பொது திறைசேரி உள்ளிட்ட ஏனைய உரிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் அத்திட்டங்களை மீளாய்வு செய்து அத்தியாவசிய திருத்தங்களுக்குட்பட்டு செயற்படுத்துவதற்காக கொள்கை ரீதியிலான ஒப்புதல் நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்படும்.

மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தேசிய கொள்கை சட்டகத்துடன் இணங்க வேண்டுமென்பதோடு மாகாண நடுத்தர ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மாகாண தேவைப்பாடுகள் மற்றும் முதன்மை தேவைப்பாடுகளையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், திட்டமதிப்பு மற்றும் பெறுபேறுகளை மதிப்பிடும் செயன்முறை இலகுபடுத்தப்படுத்துவதற்காக இத்திட்டத்தில் உள்ளடங்கும் அனைத்து முதலீட்டிற்கும் பெறுபேறு முறையிலான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு முறைமையினை பின்பற்றி, அளவிடக்கூடிய வெளியீடு மற்றும் விளைவு வரைவிலக்கணப்படுத்தப்படுமாறு செயலாற்றுகை சுட்டெண்கள் தயாரிக்கப்பட வேண்டும். (2026 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளினால் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டிய முறை தொடர்பில் நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் உள்ளிட்ட 2025.10.07 ஆந்திகதிய கடிதம் இவ்வறிக்கையின் பின்னிணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளது)

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியாக மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் ஏற்பாடுகளின் ஒரு பகுதி (5% - 10% இற்கும் இடையில்) நெகிழ்வான நிதியாக ஒதுக்கப்படுவதோடு இவ்வொதுக்கீடு மாகாணத்தின் ஒவ்வொரு துறைகளுக்காக தயாரிக்கப்படும் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கம் செய்யப்படாத மாகாண மக்களின் முதன்மை அபிவிருத்தி இடைவெளிகளை நிரப்புவதற்காக மற்றும் புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் வருமான உருவாக்கத்தின் மூலம் மக்களின் பொருளாதார நிலைமையினை மேம்படுத்துவதற்கு பங்களிக்கும் பொருளாதார ரீதியில் திறனுடைய விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும்.

மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் கீழ் 2022 – 2024 கால எல்லைக்குள், மாகாண சபைகளுக்காக பாதீட்டினால் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மற்றும் விடுவிக்கப்பட்ட முற்பணத்தொகை மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ஆகியன பற்றிய விபரங்கள் கீழே அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ளதோடு 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்பட்ட மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய

அபிவிருத்தி மானிய நிதியின் (PSDG) அளவுகள் கீழே உள்ள அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 01:மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதிக்கான ஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு (2022-2025)

(ரூ. மில்லியன்.)

வருடம் / மாகாணம்	2022			2023			2024			2025
	ஒதுக்கீடு	விடுவிப்பு	%	ஒதுக்கீடு	விடுவிப்பு	%	ஒதுக்கீடு	விடுவிப்பு	%	ஒதுக்கீடு
மேல்	836.00	418.00	50	1,261.00	641.65	51	1,685.00	1,179.50	70	5,894.00
மத்திய	1,040.00	520.00	50	1,889.00	961.15	51	2,743.00	1,920.10	70	7,360.00
தென்	971.00	485.50	50	1,620.00	825.20	51	2,472.00	1,854.00	75	6,976.00
வட	1,243.00	621.50	50	2,190.00	1114.30	51	3,305.00	2,313.50	70	7,328.00
வடமேல்	1,012.00	506.00	50	1,708.00	869.05	51	2,423.00	1,817.25	75	6,835.00
வடமத்திய	1,227.00	613.50	50	1,946.00	990.15	51	2,894.00	1,848.40	64	7,014.00
ஊவா	1,250.00	625.00	50	2,093.00	1064.95	51	3,169.00	2,376.75	75	7,688.00
சப்ரகமுவ	1,132.00	566.00	50	2,037.00	1036.81	51	3,039.00	2,127.30	70	7,584.00
கிழக்கு	1,400.00	700.00	50	2,156.00	1097.05	51	3,270.00	2,452.50	75	7,321.00
மொத்தம்	**10,111.00**	**5,055.50**	**50**	**16,900.00**	**8,600.31**	**51**	**25,000.00**	**17,889.30**	**72**	**64,000.00**

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

அட்டவணை 02: துறைகளின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் அளவு (2023 -2025)

(ரூ.மில்லியன்.)

துறை	2023		2024		2025	
	தொகை	%	தொகை	%	தொகை	%
சமூக உட்கட்டமைப்பு	***6,554***	***38.78***	***9,729***	***38.92***	***25,334***	***39.58***
கல்வி	*2,620*	*15.50*	*3,890*	*15.56*	*9,101*	*14.22*
மேலைத்தேய மருத்துவம்	*2,000*	*11.83*	*3,001*	*12.00*	*7,953*	*12.43*
சுதேச மருத்துவம்	*549*	*3.25*	*793*	*3.17*	*1,958*	*3.06*
விளையாட்டு	*175*	*1.04*	*263*	*1.05*	*911*	*1.42*
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு	*494*	*2.92*	*710*	*2.84*	*2,063*	*3.22*
சமூக சேவைகள்	*362*	*2.14*	*526*	*2.10*	*1,303*	*2.03*
கலாச்சார விவகாரங்கள்	*98*	*0.58*	*149*	*0.60*	*521*	*0.81*
வீடமைப்பு வசதி	*154*	*0.91*	*222*	*0.89*	*722*	*1.13*
கூட்டுறவு	*51*	*0.30*	*83*	*0.33*	*293*	*0.46*
முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி	*51*	*0.30*	*92*	*0.37*	*509*	*0.80*
பொருளாதார உட்கட்டமைப்பு	***8,991***	***53.20***	***13,238***	***52.95***	***35,323***	***55.20***
மாகாண வீதிகள்	*2,951*	*17.46*	*4,300*	*17.20*	*10,324*	*16.13*
தோட்ட உட்கட்டமைப்பு	*159*	*0.94*	*236*	*0.94*	*490*	*0.77*
போக்குவரத்து	*182*	*1.08*	*264*	*1.06*	*615*	*0.96*
காணி	*55*	*0.33*	*80*	*0.32*	*315*	*0.49*
விவசாயம்	*998*	*5.91*	*1,479*	*5.92*	*4,438*	*6.93*
கால்நடை	*679*	*4.02*	*1,004*	*4.02*	*3,069*	*4.80*
நன்னீர் மீன்பிடி	*209*	*1.24*	*309*	*1.24*	*773*	*1.21*
நீர்ப்பாசனம்	*1,146*	*6.78*	*1,697*	*6.79*	*4,280*	*6.69*
கிராமிய அபிவிருத்தி	*318*	*1.88*	*463*	*1.85*	*1,200*	*1.88*
சிறு தொழில்	*290*	*1.72*	*424*	*1.70*	*1,433*	*2.24*
கிராமிய மின்சாரம்	*88*	*0.52*	*135*	*0.54*	*614*	*0.96*
சுற்றுலாத்துறை	*283*	*1.67*	*418*	*1.67*	*1,390*	*2.17*
உள்ளூராட்சி	*1,633*	*9.66*	*2,429*	*9.72*	*6,382*	*9.97*
மொத்தம்	***15,545***	***91.98***	***22,967***	***91.87***	***60,657***	***94.78***
நெகிழ்வான தொகையின் கீழான திட்டங்கள்	*988*	*5.85*	*700*	*2.80*	*1,977*	*3.09*
விசேட அபிவிருத்தித் திட்டங்களுக்கான மானியம்	*367*	*2.17*	*1,333*	*5.33*	*1,366*	*2.13*
மொத்தத் தொகை	***16,900.00***	***100.00***	***25,000***	***100.00***	***64,000***	***100.00***

**2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் இங்கு காட்டப்பட்டுள்ளது. சில துறைகளுக்காக முதலில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் தொகைகள் மாகாண அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கிணங்க பின்னர் திருத்தப்பட்டன.*

2.2.3 பிரமாண அடிப்படையிலான மானிய நிதி (CBG)

மூலதன செலவினத் தேவைகளுக்கு பிரமாண அடிப்படையிலான மானிய நிதி பரிந்துரைக்கப்படும் என்பதோடு, இவ்வறிக்கையின் 3.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதிக்காக விரிவாக அடையாளம் காணப்பட்ட 23 விடயங்களுக்கு மேலதிகமாக அக்குறிப்பிட்ட 2 விடயங்கள் அல்லது மேற்பட்ட விடயங்களுக்குரிய கருத்திட்டங்கள் அல்லது செயற்பாடுகளுக்காக இந்த மானிய நிதி ஒதுக்கப்படுகிறது. அதேபோல் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதிக்காக தயாரிக்கப்படும் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்த பின்பு அடையாளம் காணப்படும் வேறு முதன்மையான தேவைகள், குறிப்பாக மக்கள் பிரதிநிதிகளால் அவ்வப்போது அடையாளம் காணப்படுகின்ற தேவைகளுக்காகவும் இந்த மானிய நிதி பயன்படுத்தப்படும்.

இப்பிரமாண அடிப்படையிலான மானிய நிதி துறைகளுக்கு பகிரப்படாமல் தனியொரு நிதியாக மாகாண சபைகளுக்கு கிடைக்கப்பெறுவதோடு, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதனை குறிக்கோளாகக் கொண்டு மக்களின் சமூக- பொருளாதார நிலைமையினை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதற்காக இம்மானிய நிதியினை மாகாண சபைகளின் விருப்பத்திற்கேற்ப செலவு

செய்ய முடியும். அம்மானிய நிதியினைப் பயன்படுத்துகையில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை நிதி ஆணைக்குழு மாகாண சபைகளுக்கு வெளியிடும்..

2021 – 2025 கால எல்லையில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மானிய நிதி மற்றும் திறைசேரியினால் விடுவிக்கப்படும் முற்பணம் தொடர்பிலான விபரங்கள் அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 03: பிரமாண அடிப்படையிலான மானிய நிதிக்காக பாதீட்டினால் ஒதுக்கப்பட்ட மானிய நிதி மற்றும் விடுவிக்கப்பட்ட முற்பணத் தொகை (2021-2025)

(ரூ. மில்லியன்.)

மாகாணம்	2021			2022			2023			2024			2025
	ஒதுக்கீடு	விடுவிக்கப்பட்ட பணிமுற்பணம்	%	ஒதுக்கீடு	விடுவிக்கப்பட்ட பணிமுற்பணம்	%	ஒதுக்கீடு	விடுவிக்கப்பட்ட பணிமுற்பணம்	%	ஒதுக்கீடு	விடுவிக்கப்பட்ட பணிமுற்பணம்	%	ஒதுக்கீடு
மேல்	392.00	215.60	55	80.00	44.80	56	223.00	111.50	50	371.00	259.70	70	585
மத்திய	560.00	308.00	55	190.00	106.40	56	333.00	166.50	50	555.00	388.50	70	730
தென்	494.41	271.93	55	125.00	70.00	56	304.00	152.00	50	506.00	379.50	75	692
வட	580.82	319.45	55	115.00	64.40	56	386.00	193.00	50	644.00	450.80	70	727
வடமேல்	508.00	279.40	55	201.00	112.56	56	301.00	150.50	50	502.00	376.50	75	678
வடமத்திய	450.00	247.50	55	190.00	106.40	56	343.00	171.50	50	573.00	403.80	70	696
ஊவா	560.48	308.26	55	165.00	92.40	56	369.00	184.50	50	616.00	462.00	75	763
சப்ரகமுவ	595.00	327.25	55	85.00	47.60	56	360.00	180.00	50	599.00	419.30	70	753
கிழக்கு	511.31	281.22	55	180.00	100.80	56	381.00	190.50	50	634.00	475.50	75	726
மொத்தம்	**4,652.02**	**2,558.61**	**55**	**1,331.00**	**745.36**	**56**	**3,000.00**	**1,500.00**	**50**	**5,000.00**	**3,615.60**	**72**	**6,350**

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

அத்தியாயம் 3

2026 ஆம் ஆண்டிற்கான மாகாணங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல்

3.1. 2026 ஆம் ஆண்டிற்கான மூலதன செலவினத் தேவைப்பாடு

அரசியலமைப்பின் 154ண (3) உறுப்புரை பிரகாரம் நிதி ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்டப் பொறுப்பின் படி, 2025 பெப்ரவரி 11ஆந்திகதி நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபைகளுக்கு வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க மாகாண அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களையும் கவனத்திற்கொண்டு, நிதி ஆணைக்குழுவினால் 2026 ஆம் ஆண்டிற்காக மாகாண சபைகளின் மூலதன செலவினத் தேவைப்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

1. *2025.03.03 ஆந்திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட "வளமான நாடு – அழகான வாழ்க்கை" தேசிய கொள்கை பணிச்சட்டகம் மற்றும் ஏனைய கொள்கை வழிகாட்டிகள்*

2. *அரசியலமைப்பினால் நிதி ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள்*

3. *பாதீட்டினைத் தயாரிப்பது தொடர்பிலான திறைசேரி சுற்றறிக்கைகள்*

4. *எதிர்வரும் ஆண்டுக்காக (2026) அரசின் மானிய நிதியினை எதிர்பார்த்து மாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்ட மூலதன செலவினத் தேவைப்பாடுகள்*

5. *மாகாண அதிகாரிகளுடனான இடைத்தொடர்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட தீர்க்கமான அபிவிருத்தி தேவைப்பாடுகள் மற்றும் மாகாணங்களின் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள முதன்மை அபிவிருத்தித் தேவைப்பாடுகள்.*

6. *நியாயமான முறையில் நன்மைகள் பகிரப்படும் சமமான பிராந்திய அபிவிருத்திக்கான தேவைப்பாடுகள்*

7. *மாகாணங்களின் சமூக – பொருளாதார நிலைமை*

8. *நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்*

நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க தேசிய பாதீட்டிலிருந்து ஒதுக்கீடுகளை எதிர்பார்த்து மாகாண சபைகளினால் தமது வருடாந்த மூலதன செலவினத் தேவைகளைத் தயாரித்து நிதி ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்தது. அரசின் அபிவிருத்தி உபாயம் மற்றும் மாகாணத்திற்கான குறிப்பிட்ட விசேட தேவைகள் கருத்திற் கொள்ளப்பட்டு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைவாக மாகாண சபைகளினால் தயாரிக்கப்பட்டுள்ள விரிவான நடுத்தர கால ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமானது மூலதன மானிய நிதித் தேவைகளைத் தயாரிக்கும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, கீழ்வரும் பிரிவுகள் மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்க்கப்பட்டுள்ள விடயங்களுக்காக மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி (PSDG) வடிவில் தேசிய பாதீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் மானிய நிதியினை உபயோகித்து மாகாண சபைகளின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் எதிர்வரும் வருடத்திற்காக (2026) மூலதன செலவினத் தேவைகள் நிதி ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்டுள்ளது.

- கல்வி
- சுகாதாரம்
- சுதேச மருத்துவம்
- மாகாண வீதிகள்
- நீர்ப்பாசனம்
- விவசாயம்
- கால்நடை அபிவிருத்தி
- நன்னீர் மீன்பிடி
- சிறு கைத்தொழில்கள்
- விளையாட்டு
- நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
- சமூக சேவைகள்
- கலாச்சார விவகாரங்கள்
- கூட்டுறவு அபிவிருத்தி
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி
- தோட்ட உட்கட்டமைப்பு
- போக்குவரத்து
- வீடமைப்பு
- கிராமிய மின்சாரம் (மாகாண சபை பட்டியலின் விடய எண் 34 இன் எல்லைக்குள்)
- உள்ளூராட்சி
- சுற்றுலாத்துறை
- கிராமிய அபிவிருத்தி
- காணி அபிவிருத்தி

மேற்குறிப்பிட்ட துறைகளில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்களில் உள்ளடங்காத அபிவிருத்தித் தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான நெகிழ்வான நிதியொன்றும் மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் கீழ் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

3.2. 2026 ஆம் ஆண்டிற்காக மூலதன செலவினத் தேவைகளை மதிப்பீடு செய்தல்

மேலே 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மற்றும் கௌரவ மாகாண ஆளுநர்கள் உள்ளிட்ட அரசியல் அதிகாரிகளினது அறிவுரைகளைப் பெற்றுக்கொண்டு மற்றும் பல்வேறு மக்கள் ஒழுங்கமைப்புக்களிலிருந்து மாகாண அதிகாரிகளினால் சேகரிக்கப்பட்ட தகவல்களின்பால் கவனம் செலுத்தி மாகாண நடுத்தரகால அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் உரிய மாகாண அதிகாரிகளுடன் இணைந்து மாகாண பிரதம செயலாளர் அவர்களால் மாகாண துறை ரீதியான மூலதன செலவினத் தேவைகள் முதன்மையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மாகாணங்களில் காணப்படும் சாத்தியக்கூறுகளை மாகாணத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக்கொள்ளல் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக அரச மானிய நிதி முதலீடு செய்யப்பட வேண்டும். இதற்கமைய, முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைத்தல், பிராந்திய ரீதியில் உள்ள தொடர் வேலைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிறுவனங்கள் மற்றும் பயனாளிகளின் ஆளுமை விருத்தி மூலதன தேவைகளுள் முதன்மையாக உள்ளடங்கும்.

மேற்குறிப்பிட்டவற்றை கருத்திற்கொண்டு, 2026 வருடத்திற்கான மொத்த மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியாக (PSDG) மதிப்பிடப்பட்ட தொகை 132,000 மில்லியன் ரூபாய் ஆகும்.அதனைத் தவிர 2026 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மானிய நிதியாக (CBG) 15,000 மில்லியன் ரூபாய் தொகையினை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.அதற்கமைய,

பரிந்துரைக்கப்பட்ட மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி	*ரூ.*	*132,000 மில்லியன்*
பரிந்துரைக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மானிய நிதி	*ரூ.*	*15,000 மில்லியன்*
பரிந்துரைக்கப்பட்ட மொத்த மூலதனத் தேவை	*ரூ .*	*147,000 மில்லியன்*

2024 ஆம் ஆண்டு வரையில், மாகாண வருமான இலக்கு மாகாணங்களின் மொத்த மீண்டெழும் தேவைகளுடன் ஈடுசெய்யப்பட்டது. எவ்வாறாயினும் 2025 ஆம் ஆண்டு தொடக்கம், ஒன்பது மாகாண சபைகளினாலும் சேகரிக்கப்பட்ட மொத்த மாகாண வருமானத்தில் 50% மீண்டெழும் செலவினங்களோடும், எஞ்சிய 50% மூலதன செலவினத்தோடும் (மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி) ஈடுசெய்யுமாறு நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, இம்முன்மொழிவினை எதிர்வரும் வருடங்களுக்காகவும் நிதி ஆணைக்குழு பரிந்துரைப்பதோடு, இவ்வறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளவாறு 2026 ஆம் ஆண்டுக்கான மொத்த மாகாண வருமான இலக்கில் 50% மூலதன செலவுகளுக்கு ஈடுசெய்வதற்கு நிதி ஆணைக்குழு முன்மொழிகின்றது. அதற்கமைய, வருமான இலக்கினை ஈடுசெய்ததன் பின்னர் பரிந்துரைக்கப்பட்ட மொத்த மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி 114,647.50 மில்லியன் ரூபாயாகும். இத்தொகை 2026 ஆம் ஆண்டுக்காக பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மூலதன செலவின எல்லையுடன் ஈடுசெய்வது தொடர்பாக இவ்வறிக்கையின் 4.1.2 வின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

3.3 2026 ஆம் ஆண்டுக்கான திரள் மானிய நிதித் தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்தல்

நிதி ஆணைக்குழுவினால் 2025 மார்ச் மாதம் 7ஆந்திகதி வெளியிடப்பட்ட மீண்டெழும் வரவுசெலவுத்திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களுக்கு இணங்க, மாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்ட மீண்டெழும் தேவைகளை பரீட்சித்து மாகாண அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் பாதீட்டு கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னர் நிதி ஆணைக்குழுவினால் 2026 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் தேவைகள் மதிப்பிடப்பட்டது.

கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 2026 ஆம் ஆண்டின் மீண்டெழும் தேவைகள் மதிப்பிடப்படும்.

I. தனிப்பட்ட வேதனங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2025.03.31 ஆந்திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் பாதீட்டு கலந்துரையாடல்களின் போது ஒப்புதலளிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சம்பளம் மற்றும் ஊதியங்களின் தேவைப்பாடு மதிப்பிடப்பட்டுள்ளது.

(i) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் 2025.03.31 ஆந்திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 459,015 ஆகும்.

அட்டவணை 04: முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் 2025.03.31 ஆந்திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்

விபரம்	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2025.03.31 ஆந்திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணியினர் எண்ணிக்கை	தற்போதுள்ள ஆளணி (உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர் தவிர்த்த)	வெற்றிடமாகவுள்ள ஆளணியினர் எண்ணிக்கை	பாதிடப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கை
மாகாண சபைகள்	399,526	353,562	63,123	416,685
உள்ளூராட்சி	59,489	44,794	12,607	57,401
மொத்த ஆளணி	**459,015**	**398,356**	**75,730**	**474,086**

சில சந்தர்ப்பங்களில், மாகாணங்களினால் முன்வைக்கப்பட்ட ஆளணியினர் போலவே சில உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள ஆளணியினரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரிலும் பார்க்க அதிகமாக இருப்பதாகத் தெரிகின்றது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளிலுள்ள ஆளணியினர் மற்றும் அத்திணைக்களத்தினால் அங்கீகரிக்க எதிர்பார்த்துள்ள பதவிகளிலுள்ள ஆளணியினருக்கான தனிப்பட்ட ஊதியங்களுக்கு மாத்திரம் நிதி ஆணைக்குழு செலவுகளை பரிந்துரை செய்கின்றது.

(ii) 2026 ஆண்டில் நிரல் அமைச்சுக்களினால் மாகாண சபைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட மற்றும் இணைப்பிற்காக எதிர்பார்க்கும் பதவிநிலை மற்றும் தொழில்நுட்ப சேவை பதவிகள் 34,467 க்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பெறுமானங்கள் மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு	- ரூ. 30,188 மில்லியன்
சுகாதார மற்றும் வெகுசன அமைச்சு	- ரூ. 5,827 மில்லியன்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்	- ரூ. 297 மில்லியன்
கமத்தொழில் திணைக்களம்	- ரூ. 39 மில்லியன்
நிரல் அமைச்சு இணைப்புக்களுக்கான மொத்த தனிப்பட்ட ஊதியங்கள்	**- ரூ. 36,351 மில்லியன்**

(iii) அரசின் கொள்கைத் தீர்மானங்களுக்கிணங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட வேலையில்லாப் பட்டதாரிகளுக்காகவும் (முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இந்நியமனங்கள் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை எனினும்) 2026 ஆம் ஆண்டிற்கு நிதி மதிப்பிடப்பட்டுள்ளது.

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின்றி அரச தீர்மானங்களுக்கமைய நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 29/2019 பிரகாரம் இதுவரையில் அங்கீகரிக்கப்படாத ஆளணியினர்.

(v) 2026 ஆம் ஆண்டுக்காக உள்ளூராட்சி மன்றங்களின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கையின் சம்பளம் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட தொகை 34,930 மில்லியன் ரூபாய் ஆகும்.2024 ஆம்

ஆண்டில் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவின் படி, 2026 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றங்களுக்கான சம்பளத்தினை கணக்கிடுகையில் மாநகர சபைகளுக்கு 40% மும் நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு 20%மும் குறைக்கப்படும் என்று அனுமானித்து இதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இக்கணக்கிடுகையில் 2024.06.20 ஆந்திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க உள்ளூராட்சி மன்றங்களினால் நிரந்தரமாக்கப்பட்ட அமய உத்தியோகத்தர்கள் 8,435 கருத்திற்கொண்டுள்ளதோடு அதில் 6,678 பேருக்கு உரிய உள்ளூராட்சி மன்றங்களினால் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.அதற்கமைய மத்திய அரசினால் சம்பள மீளளிப்பிற்குரிய ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஊதியங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(vi) நிதி ஆணைக்குழுவினால் முன்னர் எடுக்கப்பட்ட 2018.04.2025 தீர்மானத்திற்கிணங்க, நியதிச்சட்ட நிறுவனங்கள் மூன்றிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கு மாத்திரம் பொது திறைசேரியினால் சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் பரிந்துரைக்கப்படுவதோடு, அதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை (PRDA), மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை (PPTA), முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அதிகார சபை (ECDA) உள்ளடங்கும். ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் ஆளணியினருக்கான செலவு அந்நிறுவனங்களின் வருவாயிலிருந்து பூரணப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(vii) அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இனால் முன்மொழியப்பட்ட சம்பள திருத்தத்திற்கு அமைய சம்பளம் மற்றும் ஊதியங்கள் மதிப்பிடப்பட்டதோடு மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளத்திற்கான தேவைப்பாடு, கணக்கிடும்போது தனிநபர் செலவினமும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(viii) மாகாணங்களினால் கல்வித்துறைக்கு முன்வைக்கப்பட்ட நிலுவைச் சம்பளம், விடயங்களை உறுதிப்படுத்திய பின்னர் இதற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ix) மாகாண சபைகளுக்கு தெரிவாகும் உறுப்பினர்களுக்கான உறுப்பினர் கொடுப்பனவு மற்றும் அவர்களின் தனிப்பட்ட ஊழியர்களின் தனிப்பட்ட ஊதியங்களுக்கான செலவினம் சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய மதிப்பிடப்பட்டுள்ளது.

II. ஏனைய மீண்டெழும் செலவினங்கள்

(i) பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித்திட்டம்

கல்வித் திணைக்கள செயலாளரின் இலக்கம் ED/16/02/02/03/202 மற்றும் 2025.06.20 ஆந்திகதிய கடிதத்தின் மூலமான கோரிக்கைக்கு அமைய, மாகாண மற்றும் தேசிய பாடசாலைகள் ஆகிய இரண்டு வகைப் பாடசாலைகளினதும் பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்திற்காக (மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை 9099 இலுள்ள சிறுவர்கள் 1,523,436 பேருக்கான பாடசாலை நாட்கள் 200 இற்குரிய ஒரு வேளை உணவிற்கான தினசரி செலவு ரூ.110 எனக் கருத்திற் கொண்டு)மதிப்பிடப்பட்ட 33,516 மில்லியன் ரூபாய் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது.(மாகாண சபைகளினால் செயற்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் நிர்வாகச் செலவு இதில் உள்ளடக்கப்படவில்லை) முன்னர் இணங்கியவாறு, குறித்த செலவினங்கள் (நிரல்) கல்வி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ii) பராமரிப்பு செலவினம்

அன்றாடத் தேவைகளுக்குத் தேவையான போதியளவு நிதியினை உறுதிப்படுத்துவதற்காக பொது பராமரிப்பு செலவுகளின் தேவைப்பாடு மற்றும் வீதிகள், நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் கல்வி ,சுகாதாரம் ,நீர்ப்பாசனம் ,விவசாயம் மற்றும் ஏனைய துறைகளில் கட்டட மற்றும் கட்டுமான பராமரிப்பு உள்ளிட்ட மாகாண சொத்துக்களை புதுப்பித்தல் மற்றும் புனர்நிர்மாணம்

செய்வதற்கான சொத்து பராமரிப்பு தேவைப்பாடு வெவ்வேறாக மதிப்பிடப்பட்டு 27,517 மில்லியன் ரூபாய் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(iii) ஏனைய சமூக நலச் செலவுகள்

இதில் விசேட தேவைப்பாட்டினை உடைய சிறுவர்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் புற்றுநோய், சிறுநீரக மற்றும் காசநோய் நோயாளிகளுக்கான ஒதுக்கிடப்பட வேண்டிய சமூக நலச் செலவுகள் இதில் உள்ளடங்கும்.

(iv) எதிர்பாரா நிகழ்வுகளுக்கான நிதியத்திற்காக மாகாண சபைகளினால் கோரிக்கை விடுக்கப்பட்ட *2,602* மில்லியன் ரூபாய் தொகையானது எமது மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(v) மத்திய அரசு மற்றும் மாகாண ஊழியர்கள் தொடர்பில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்கு முற்பண *B* கணக்கிற்காக *2026* ஆம் ஆண்டிற்காக *8,810* மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 05: 2026 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட மீண்டெழும் தேவைகள்

(ரூ.மில்லியன்)

மாகாணம்	2025.03.31 ஆந்திகதிக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மாகாண ஆளணி	தனிப்பட்ட வேதனங்கள்	தனிப்பட்ட ஊதியங்களில் மாகாணத்தின் பங்கு (%)	ஏனைய மீண்டெழும் செலவினங்கள்	ஏனைய மீண்டெழும் செலவினத்தில் மாகாணத்தின் பங்கு (%)	மொத்த மீண்டெழும் செலவினம்	மொத்த மீண்டெழும் செலவினத்தில் மாகாணத்தின் பங்கு (%)
(1)	**(2)**	**(3)**	**(4)**	**(5)**	**(6)**	**(7) = (3) + (5)**	**(8)**
மேல்	110,886	104,848.85	18.08	19,061.25	18.83	123,910.10	18.20
மத்திய	69,441	76,963.22	13.27	11,835.20	11.69	88,798.42	13.04
தென்	60,558	69,227.05	11.94	11,757.15	11.61	80,984.20	11.89
வட	45,684	49,925.23	8.61	8,940.58	8.83	58,865.81	8.64
வடமேல்	60,073	70,688.15	12.19	11,191.60	11.06	81,879.75	12.02
வடமத்திய	35,213	42,364.52	7.31	9,333.88	9.22	51,698.40	7.59
ஊவா	41,594	46,934.38	8.10	8,009.72	7.91	54,944.10	8.07
சப்ரகமுவ	46,527	58,833.11	10.15	10,595.54	10.47	69,428.65	10.20
கிழக்கு	48,528	59,992.98	10.35	10,502.01	10.37	70,494.99	10.35
மொத்தம்	**518,504**	**579,777.48**	**100.00**	**101,226.94**	**100.00**	**681,004.42**	**100.00**

சேர்க்கவும்	எதிர்பாரா நிகழ்வுகளுக்கான நிதியம் - 2026	**2,602.00**
	முற்பண பி கணக்கிற்கான கோரிக்கை – 2026	**8,810.00**
மதிப்பிடப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம்		**692,416.42**

குறிப்பு:-

3 ஆம் நிரல் – உண்மையான ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களுக்கான தனிப்பட்ட ஊதியங்கள், நிரல் அமைச்சுக்களுக்கான இணைப்புக்கள் மற்றும் நிலுவை சம்பளம் உள்ளடங்கும்.

5 ஆம் நிரல் – பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினம், பராமரிப்பு செலவினம், விநியோகங்கள், ஒப்பந்த சேவைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளடங்க மாட்டாது.

அதற்கமைய, 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண மீண்டெழும் செலவினத் தேவைப்பாடு 692,416 மில்லியன் ரூபாயாகும்.

3.4. 2026 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அரசின் செலவின எதிர்வுகூறல்

அரசியலமைப்பின் 154ண (3) உறுப்புரையினால் எதிர்பார்த்தவாறு, நிதி ஆணைக்குழுவினால் மேற்குறிப்பிட்டவாறு முறையாக மாகாணத் தேவைகள் கணக்கிடப்பட்டு ஒன்பது மாகாண சபைகளுக்கும் அத்தியாவசியமான மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் தொடர்பான பரிந்துரைகள் 2025.08.14 ஆந்திகதி பொது திறைசேரிக்கு முன்வைக்கப்பட்டது. அவ்வாறிருப்பினும், 2024 ஆம் ஆண்டு 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்திற்கமைய ஒன்பது மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்காக எதிர்வு கூறப்பட்ட தொகைகளாவன மொத்த மூலதன ஒதுக்கீடு 77,000 மில்லியன் ரூபாய் மற்றும் மொத்த மீண்டெழும் ஒதுக்கீடு 533,000 மில்லியன் ரூபாயுமாகும். 2026 ஆம் ஆண்டிற்கு முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட சட்ட வரைவில் அதனையொத்த தொகையொன்றே உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வழங்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கீட்டினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சதவீதங்களைப் போன்றே மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்து அது தொடர்பாக மாகாண பிரதம செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறிருப்பினும், ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள மீண்டெழும் செலவினமானது பரிந்துரைக்கப்பட்ட மீண்டெழும் செலவினங்களிலும் பார்க்க குறைவடைந்ததன் காரணமாக எதிர்காலத்தில் இவ்வறிக்கையின் 4 ஆவது அத்தியாயத்தின் 4.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

3.5. மாகாண வருமானங்கள்

மாகாண சபைகளின் வருமானம் முக்கியமாக கீழ் குறிப்பிடப்படும் இரு வகைகளினால் கிடைக்கப்பெறுகிறது.

I. அரச மாற்றல்களின் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம்

மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த முக்கிய வருமான மூலமான விற்பனை புரள்வு வரியினை (BTT) ரத்து செய்த பின்னர் அதற்குப் பதிலாக பொது திறைசேரியினால் வெளியிடப்பட்ட அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2010 இற்கமைய, மத்திய அரசினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுவதற்காக விசேடமான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டதோடு கீழே காட்டப்பட்டுள்ள நியம சதவீதங்களின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியில் (NBT) 33 1/3%
b) முத்திரை வரியில் 100%
c) வாகன பதிவுக் கட்டணத்தில் 70%

அரசினது வருமான மாற்றல்களினூடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் தொகை மேற்குறிப்பிட்ட அரச நிதிக்கொள்கை சுற்றறிக்கைக்கு இணங்க தீர்மானிக்கப்படும். இவ்வருமான மாற்றல் முறையினை அறிமுகப்படுத்திய பின்னர் மாகாண சபைகளுக்கு வருமானம் கிடைத்தலானது உயர்ந்தாலும், 2019 ஆம் வருடத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும்

வரியினை ரத்து செய்த பின்னர், மாகாண சபைகளின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது.

II. மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள மூலங்களிலிருந்து சேகரிக்கப்படும் வருமானம்

மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள வருமான மூலங்கள் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது அட்டவணையில் 36.01 தொடக்கம் 36.20 வரையில் குறிப்பிட்டுள்ள வரி மற்றும் வரியல்லாத வருமானங்களை உள்ளடக்கியது. மாகாண சபை வருமானங்களின் பிரதான மூலங்களாக முத்திரைத் தீர்வை, மோட்டார் வாகன அனுமதிப்பத்திர கட்டணம், மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப்பத்திர கட்டணம், மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானங்கள் உள்ளடங்கும். இம்மூலங்களுள் முத்திரை கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் மாகாண சபைகளினால் சட்டபூர்வமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டியுள்ளது.

மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள வருமான மூலங்களுக்காக (முத்திரைத் தீர்வை, நீதிமன்ற தண்டப்பணம், மோட்டார் வாகன அனுமதிப்பத்திர கட்டணம், மதுபான விற்பனை அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் ஏனைய வருமான மூலங்கள்) நிதி ஆணைக்குழுவினால் எதிர்வரும் வருடத்திற்காக வருமான இலக்குகள் வழங்கப்படும். வழமையாக பொது திறைசேரியினால் மாகாண சபைகளுக்காக திரள் மானிய நிதியினை (Block Grant) தீர்மானிக்கையில், மாகாணங்களினால் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம், மொத்த மீண்டெழும் செலவினத் தேவையிலிருந்து கழிக்கப்படும். நிதி ஆணைக்குழுவினால் எதிர்வரும் ஆண்டுக்காக மாகாண வருமான இலக்குகளைத் தீர்மானிக்கையில், அக்குறித்த மாகாணங்களினால் எதிர்வுகூறப்பட்ட மாகாண வருமான சேகரிப்பிற்குரிய மதிப்பீடு, முன்னைய ஆண்டுகளில் வருமான சேகரிப்பின் செயலாற்றுகையுடனும் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படும்.

2026 ஆண்டுக்கான எதிர்வு கூறப்பட்ட வருமானம் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளடங்கலாக 81,610 மில்லியன் ரூபாயாகும். அதில் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் தவிர்த்த மாகாண சபைகளுக்கு 2026 ஆம் ஆண்டிற்காக பயன்படுத்தக்கூடிய தொகை 34,705 மில்லியன் ரூபாயாகும். அதற்குக் காரணம், முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதாலாகும். மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள மூலங்களின் கீழ் 2026 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட வருமான எதிர்வுகூறல் அட்டவணை 06 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 06: 2026 ஆம் ஆண்டிற்காக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட வருமான இலக்கு

							(ரூ.மில்லியன்)
மாகாணம்	**மதுபானம் மீதான அனுமதிப்பத்திர கட்டணம்**	**மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திர கட்டணம்**	**முத்திரைத் தீர்வை**	**நீதிமன்ற அபராதங்கள்**	**ஏனையவை ***	**மொத்தம் (முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற அபராதங்கள் நீங்கலாக)**	**மொத்தம் (முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற அபராதங்கள் உள்ளடங்கலாக)**
மேல்	800	5,600	24,000	2,100	7,500	13,900	40,000
மத்திய	400	1,450	2,500	170	900	2,750	5,420
தென்	155	1,850	5,400	925	1,420	3,425	9,750
வட	40	700	2,100	500	960	1,700	4,300
வடமேல்	180	2,100	3,400	490	2,300	4,580	8,470
வட மத்திய	70	920	320	750	1,761	2,751	3,821
ஊவா	120	700	700	300	700	1,520	2,520
சப்ரகமுவ	125	1,250	1,500	400	1,400	2,775	4,675
கிழக்கு	94	805	900	450	405	1,304	2,654
மொத்தம்	**1,984**	**15,375**	**40,820**	**6,085**	**17,346**	**34,705**	**81,610**

*வாடகை, வட்டி, பரீட்சைக் கட்டணம், மூலதன சொத்து விற்பனை, பந்தய வரி என்பன ஏனையவற்றில் உள்ளடங்கும்.

2026ஆம் ஆண்டிற்காக எதிர்வுகூறப்பட்ட மொத்த வருமானத்தில் 46,905 மில்லியன் ரூபாய் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணமாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு மாகாண சபைகளினாலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்படும் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் மாகாண அடிப்படையில் அட்டவணை 07 இல் காட்டப்படுகிறது.

அட்டவணை 07: 2026 ஆம் ஆண்டிற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்படுவதற்காக மதிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பண இலக்குகள்.

(ரூ.மில்லியன்)

மாகாணம்	*முத்திரைத் தீர்வை*	*நீதிமன்ற தண்டப்பணம்*	*மொத்தம்*	*மாகாணத்தின் பங்கு (%)*
மேல்	*24,000*	*2,100*	*26,100*	*55.64*
மத்திய	*2,500*	*170*	*2,670*	*5.69*
தென்	*5,400*	*925*	*6,325*	*13.48*
வட	*2,100*	*500*	*2,600*	*5.54*
வடமேல்	*3,400*	*490*	*3,890*	*8.29*
வடமத்திய	*320*	*750*	*1,070*	*2.28*
ஊவா	*700*	*300*	*1,000*	*2.13*
சப்ரகமுவ	*1,500*	*400*	*1,900*	*4.05*
கிழக்கு	*900*	*450*	*1,350*	*2.88*
மொத்தம்	***40,820***	***6,085***	***46,905***	***100.00***

கடந்த 06 வருடங்களில் மாகாணங்களின் வருமானம் மாகாணத்தின் செலவினத்தின் சதவீதமாக அட்டவணை 08 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 08: மாகாண செலவினம் மற்றும் வருமான கிடைப்புக்கள் (2019-2024)

(ரூ.மில்லியன்)

வருடம்	**மொத்த செலவினம்**	**முத்திரைத் தீர்வை நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக வருமான சேகரிப்பு**	**அரசாங்க வருவாய் மாற்றல்கள்**	***மாகாணத்தின் மொத்த வருமானம்**	**மாகாண செலவினத்தின் % ஆக வருமானம்**
1	***2***	***3***	***4***	***5=(3+4)***	***6=(5/2)***
2019	*303,740*	*18,928*	*47,070*	*65,998*	*22*
2020	*326,418*	*16,767*	*11,240*	*28,007*	*9*
2021	*342,023*	*18,012*	*10,500*	*28,512*	*8*
2022	*400,165*	*24,800*	*10,189*	*34,989*	*9*
2023	*431,014*	*34,752*	*11,737*	*46,489*	*11*
2024	*474,677*	*33,243*	*16,060*	*49,303*	*10*

முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக (உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டியவை)

சனாதிபதி செயலாளரின் 2020.02.19 ஆந்திகதிய கடிதத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினால் தனது வரி அமைப்புக்களை மீளாய்வு செய்யும் வரை வரித்திருத்தம் மேற்கொள்ளப்படலாகாது. மாகாண அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் படி மேல் மாகாணம் தவிர்த்த ஏனைய 8 மாகாணங்களினதும் வருமானம் அவர்களின் செலவினங்களிலிருந்து கிட்டத்தட்ட 6% இனை உள்ளடக்கவே போதுமானதாக இருக்கின்றது. அதற்கமைய, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் வருமான ஆற்றலினை முழுமையாக பயன்படுத்திக் கொள்வது முதன்மைத் தேவையாக கருதப்படும்.

சில வருமான மூலங்களுக்குரிய வரி வீதங்கள் நீண்ட காலத்திற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு அவ்வீதங்கள் காலத்திற்கேற்றவாறு திருத்தப்பட வேண்டும். வரி வீதங்கள் காலத்துக்கேற்றவாறு திருத்தப்படாமையும், மாகாண சபைகளுக்குரிய சில வருமானங்கள் நிரல் அமைச்சுக்களால் மாகாண சபைகளுக்கு மாற்றப்படாமையும் மாகாண சபைகளுக்கு பாதக விளைவினை ஏற்படுத்தியுள்ளது.

கீழுள்ள இலக்கம் 09 அட்டவணையினால் கடந்த 06 வருடங்களுக்குள் வருமான இலக்குகள் மற்றும் வருமான சேகரிப்பிற்கிடையிலான ஒப்பீடு காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை *09 :* மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான இலக்குகள் மற்றும் சேகரிப்பு - *(2019 -2024)*

(ரூ.மில்லியன்)

மாகாணம்	2019			2020			2021			2022			2023			2024		
	இலக்கு	சேகரிப்பு	%	இலக்கு	சேகரிப்பு	%	இலக்கு	சேகரிப்பு	%	இலக்கு	சேகரிப்பு	%	இலக்கு	சேகரிப்பு	%	இலக்கு	சேகரிப்பு	%
மேல்	26,385	21,987	83	26,750	19,521	73	25,400	28,285	111	23,175	35,295	152	27,806	37,607	135	30,700	38,808	126
மத்திய	4,078	3,677	90	4,195	3,304	79	4,650	3,953	85	3,940	4,615	117	4,375	4,599	105	4,505	5,556	123
தென்	4,366	4,580	105	4,550	4,359	96	4,846	5,304	109	4,037	5,954	147	4,883	6,973	143	6,006	8,149	136
வட	1,580	1,990	126	1,860	2,074	112	2,135	2,313	108	2,345	2,948	126	2,499	3,839	154	3,040	4,068	134
வடமேல்	4,707	4,678	99	4,970	4,438	89	5,110	5,825	114	5,252	7,012	134	5,340	9,143	171	6,345	8,116	128
வடமத்திய	1,541	1,691	110	1,826	1,904	104	1,951	1,888	97	1,812	2,180	120	1,955	2,914	149	2,225	3,402	153
ஊவா	1,495	1,389	93	1,605	1,416	88	1,640	1,604	98	1,629	1,760	108	1,500	2,032	135	1,790	2,491	139
சப்ரகமுவ	2,195	2,720	124	2,275	2,350	103	2,500	2,508	100	2,477	2,810	113	2,535	4,046	160	2,920	4,545	156
கிழக்கு	1,640	1,523	93	1,725	1,637	95	1,780	1,770	99	1,752	2,057	117	1,870	2,813	150	2,075	2,644	127
மொத்தம்	**47,987**	**44,235**	**92**	**49,756**	**41,003**	**82**	**50,012**	**53,450**	**107**	**46,419**	**64,631**	**139**	**52,763**	**73,966**	**140**	**59,606**	**77,778**	**130**

***** முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளடங்கலாக வருமான சேகரிப்பு மற்றும் இலக்குகள்

அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட அரச வருமானத்தில் மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்வதற்குரிய பெறுமானங்கள் மாகாண வருமான மதிப்பீட்டிற்கு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அக்குறிப்பிட்ட வருமான இலக்குகள் மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமானம் தொடர்பிலான தகவல்கள் கீழே இலக்கம் 10 அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை *10:* திறைசேரியிலிருந்து வருமானங்களை மாகாண சபைகளுக்கு மாற்றல் – இலக்குகள் மற்றும் விடுவிக்கப்பட்ட தொகை *(2021-2024)*

(ரூ.மில்லியன்)

மாகாணம்	2021			2022			2023			2024		
	இலக்கு	விடுவிப்பு	%	இலக்கு	விடுவிப்பு	%	இலக்கு	விடுவிப்பு	%	இலக்கு	விடுவிப்பு	%
மேல்	6,720	5,001	74	6,720	4,734	70	6,000	5,680	95	7,608	7,669	101
மத்திய	1,260	952	76	1,260	897	71	1,125	1,093	97	1,427	1,459	102
தென்	1,260	951	75	1,260	893	71	1,125	1,074	95	1,427	1,470	103
வட	700	513	73	700	531	76	625	540	86	793	784	99
வடமேல்	1,260	954	76	1,260	1,096	87	1,125	998	89	1,427	1,518	106
வடமத்திய	700	538	77	700	500	71	625	600	96	793	702	89
ஊவா	700	522	75	700	493	70	625	586	94	793	813	103
சப்ரகமுவ	700	536	77	700	504	72	625	617	99	793	840	106
கிழக்கு	700	533	76	700	539	77	625	549	88	793	805	102
மொத்தம்	**14,000**	**10,500**	**75**	**14,000**	**10,187**	**73**	**12,500**	**11,737**	**94**	**15,851**	**16,060**	**101**

மூலங்கள்: அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் அறிக்கைகள் மற்றும் மாகாண வருமான சேகரிப்பு அறிக்கைகள்

அதற்கமைய, சில ஆண்டுகளில்,மாகாண சபைகளுக்கென கிடைக்கப்பெறும் முழுமையான பங்கு மாற்றப்படவில்லை எனவும், அதன் காரணமாக 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த தொகையிலும் கூடிய வருமானத் தொகையொன்று ஒட்டுமொத்தமாக மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அத்தியாயம் 4

2026 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளுக்கிடையே அரச மானிய நிதியை பகிர்ந்தளிப்பது தொடர்பான பரிந்துரைகள்

4.1 மூலதன மானிய நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பான பரிந்துரைகள்

அரசியலமைப்பின் 154ண (3) உறுப்புரையில், ஒவ்வொரு மாகாணங்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான அரசினால் ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் ஆணைக்குழுவினை விசாரித்து வருடாந்த பாதீட்டு ஆவணத்தினால் ஒதுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.குறித்த செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கப்பட வேண்டிய தொகை குறித்து நிதி ஆணைக்குழுவினால் அரசிற்கு பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்.

மேலும், அரசியலமைப்பின் 154ண (4) உறுப்புரைக்கமைய, மாகாணங்களுக்கு அரசினால் வருடாந்தம் ஒதுக்கப்படும் மானிய நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முறை பற்றி கொள்கைகள் உள்ளடங்கிய பரிந்துரைகளானவை, கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் முன்வைக்க வேண்டிய கடப்பாடும் நிதி ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. நாட்டினுள் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை எய்தும் நோக்கத்துடன் மேற்குறிப்பிட்ட கொள்கைகளைக் கட்டியெழுப்புகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களை கருத்திற்கொள்ள வேண்டுமென அரசியலமைப்பின் 154ண (5) உறுப்புரையில் காட்டப்பட்டுள்ளது.

- *அ) ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை*
- *ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானம்*
- *இ) பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை : அத்துடன்*
- *ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானத்திற்கும், மாகாணங்களுக்கிடையிலான அதி உயர் தலைக்குரிய வருமானத்திற்கும் இடையேயான வித்தியாசத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை.*

4.1.1. மாகாணங்களுக்கிடையே மூலதன மானிய நிதியினைப் பகிர்ந்தளிப்பதற்கு பயன்படுத்தப்படும் முறை

அரசியலமைப்பின் 154ண (5) உறுப்புரையினால் விளக்கப்படும் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கு, மேற்குறிப்பிட்ட பிரமாணங்கள் மற்றும் அக்குறித்த பிரமாணங்கள் நன்கு வரைவிலக்கணப்படுமாறு மற்றும் புள்ளிவிபரமாக காட்டப்படக்கூடிய வேறு பிரமாணங்களையும் பயன்படுத்தி வளபகிர்விற்காக சுட்டெண் ஒன்று தயாரிக்கப்படவேண்டியுள்ளது. அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிற்கான சுட்டெண்ணினை தயாரிக்கும் போது மேற்குறிப்பிட்ட (அ) மற்றும் (ஆ) பிரமாணங்கள் போன்றே மேற்குறிப்பிட்ட (இ) மற்றும் (ஈ) ஆகிய பிரமாணங்களையும் புள்ளிவிபர அடிப்படையில் காட்டுவதற்கு முடியுமானவாறு ஒவ்வொரு மாகாணத்திற்குமுரிய இங்கு கீழே காட்டப்பட்டுள்ள (iii), (iv), (v) சனத்தொகை – 2024

- *(i) சனத்தொகை*[அ]
- *(ii) மாதாந்த குடித்தனக்கூறின் சராசரி தலா வருமானம்* [ஆ]
- *(iii) க.பொ.த (உ/த) விஞ்ஞான பிரிவிலிருந்து பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதி பெற்றவர்களின் சதவீதம்* [இ]
- *(iv) மாகாணத்தின் வறுமையான சனத்தொகை* [ஈ]

(v) மாகாணத்தின் ஒரு மருத்துவ அதிகாரிக்கு உள்ள நபர்களின் எண்ணிக்கை [உ]
(vi) கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் (மெலிந்த தோற்றம்) பாதிப்புற்ற 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் சதவீதம் [ஊ]

மேலே குறிப்பிட்ட மாறிகளின் அடிப்படையில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்காக பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஜே . எஸ். என்.பீ.தர்மவர்தன அவர்களின் துணையுடன் காரணிப் பகுப்பாய்வு (Factor Analysis) எனக் குறிப்பிடப்படும் பால்மாறி புள்ளிவிபரவியல் முறையொன்றினைப் (Multivariate Statistical Techniqe) பயன்படுத்தி ஒவ்வொரு மாகாணத்திற்கும் உரிய கூட்டுச் சுட்டெண் ஒன்று (Composite Index) தயாரிக்கப்பட்டது.ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள மாவட்டங்களுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளும் அதிகமாகையால், கூட்டுச் சுட்டெண்ணினை கணக்கிடுகையில் முதலில் மாவட்ட சுட்டெண் தயாரிக்கப்பட்டு, அதற்கமைய உரிய மாகாணத்தின் மாவட்டங்களின் கூட்டுத்தொகையினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மாகாண கூட்டுச் சுட்டெண் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்காக நடைமுறையில் காணப்படும் மிகவும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, அதற்குரிய தரவுகள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், குடும்ப சுகாதாரப் பணியகம் , பரீட்சைத் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த மாறிகளுள் (i),(iv), (v) மற்றும் (vi) ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள மாறிகள் கூட்டுச் சுட்டெண்ணுடன் நேர்மறை தொடர்பினைக் காட்டுவதோடு, (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாறிகள் கூட்டுச் சுட்டெண்ணுடன் எதிர்மறை தொடர்பினைக் காட்டுகிறது. அதாவது, உதாரணமாக மாதாந்த குடித்தனக்கூறின் சராசரி தலா வருமானம் அதிகரித்தல் எதிர்மறைத் தாக்கம் செலுத்தும். சனத்தொகை அதிக பெருமானத்தினைக் கொண்டிருக்கையில், குறித்த மாறி கூட்டுச் சுட்டெண்ணிற்கு நேர்த்தாக்கம் செலுத்துவதோடு, அதற்கமைய உரிய மாகாணத்திற்கு நிதி ஒதுக்கிடும் போது சனத்தொகை உயர்ந்த பெறுமானத்தினைக் கொண்டிருப்பது நேர் பெறுபேற்றினை உருவாக்கும்

குறித்த முறையினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புள்ளிவிபரவியல் சூத்திரத்தினைப் பயன்படுத்தி 2026 ஆம் ஆண்டுக்கான அரசின் வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் மூலதன நிதியில் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய சதவீத பெறுமானங்கள் நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கிடையே மூலதன மானிய நிதியினைப் பகிர்ந்தளிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட குறித்த சதவீதங்கள் கீழே அட்டவணை 11 இல் காட்டப்பட்டுள்ளது.

அ, ஆ, ஈ – தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல்
இ – பரீட்சைத் திணைக்களம் திணைக்களம்
உ – சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
ஊ – குடும்ப சுகாதாரப் பணியகம்

அட்டவணை 11: ஒவ்வொரு மாகாணத்திற்குமான கூட்டுச் சுட்டெண் பெறுமானங்களின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டுக்காக மூலதன நிதிப்பகிர்விற்கு கணக்கிடப்பட்ட சதவீதங்கள்

மாகாணம்	***கூட்டுச் சுட்டெண் பெறுமானத்தின் அடிப்படையில் மாகாண சதவீத பெறுமானம்***
மேல்	*9.24*
மத்திய	*11.43*
தென்	*10.97*
வட	*11.46*
வடமேல்	*10.89*
வடமத்திய	*11.28*
ஊவா	*11.89*
சப்ரகமுவ	*11.55*
கிழக்கு	*11.29*
மொத்தம்	***100.00***

மேலே விபரிக்கப்பட்ட சூத்திரமானது அரசியலமைப்பில் குறிப்பிடப்படும் நோக்கங்களுக்குப் பொருத்தமானவாறு நன்கு பரிசீலித்து தயாரிக்கப்பட்ட ஒன்று எனினும், அச்சூத்திரத்தின் பயன்பாடு வரையறைக்குட்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்குக் கிடைக்கப்பெறும் (மேற்குறிப்பிட்ட சூத்திரத்திற்கமைய மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்) மூலதன செலவிற்காக ஒதுக்கப்படும் நிதி, நிரல் அமைச்சுக்களுக்கு கிடைக்கப்பெறும் மூலதன ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் (கிட்டத்தட்ட மொத்த மூலதனச் செலவினத்தில் 15% போல்) சிறிய தொகையாக காணப்படல் மற்றும் ஒப்பீட்டளவில் அதிக ஒதுக்கீட்டினைப் பெறும் நிரல் அமைச்சினால் பல்வேறு பிரதேசங்களில் அரச முதலீட்டிற்காக நிதி ஒதுக்கிடுகையில் நிதி ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படும் சூத்திரத்தினை ஒத்த சூத்திரமொன்றினைப் பயன்படுத்தாமை அதற்குக் காரணமாகும். ஆகையால், நிரல் அமைச்சுக்களினாலும் பல்வேறு பிரதேசங்களுக்கு நிதி ஒதுக்கிடுகையில் நிதி ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படும் சூத்திரத்தினை ஒத்த (இதே சூத்திரம் அத்தியாவசியம் இல்லை) சூத்திரமொன்றினைப் பயன்படுத்துவதற்காக நிரல் அமைச்சுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவது உசிதமாகும் என நிதி ஆணைக்குழுவினால் கடந்த ஆண்டு பரிந்துரை செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்டுள்ள சதவீதப் பெறுமானங்களை பயன்படுத்தி இதில் 3 ஆவது அத்தியாயத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிதிப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு 2026 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளின் மூலதன மானிய நிதித் தேவைப்பாடுகளாக கீழே அட்டவணை 12 இல் காட்டப்பட்டுள்ள பெறுமானங்களை பகிர்ந்தளிப்பதற்கு நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

அட்டவணை 12: 2026 ஆம் ஆண்டுக்காக கணக்கிடப்பட்ட சதவீதங்களுக்கேற்ப ஒவ்வொரு மாகாணத்திற்கும் பரிந்துரைக்கப்பட்ட மூலதன மானிய நிதியினைப் பகிர்ந்தளித்தல்

மாகாணம்	பரிந்துரைக்கப்பட்ட மூலதன மானியம் (ரூ.மில்லி.)		பரிந்துரைக்கப்பட்ட மொத்த மூலதன மானிய நிதி (ரூ.மில்லி.)	மூலதன மானிய நிதியில் மாகாணத்தின் சதவீதம் (%)
	மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி	பிரமாண அடிப்படையிலான மானிய நிதி		
மேல்	12,197	1,386	13,583	9.24
மத்திய	15,088	1,715	16,803	11.43
தென்	14,480	1,645	16,125	10.97
வட	15,127	1,719	16,846	11.46
வடமேல்	14,375	1,633	16,008	10.89
வடமத்திய	14,889	1,692	16,581	11.28
ஊவா	15,695	1,784	17,479	11.89
சப்ரகமுவ	15,246	1,733	16,979	11.55
கிழக்கு	14,903	1,693	16,596	11.29
மொத்தம்	**132,000**	**15,000**	**147,000**	**100.00**

நிதி ஆணைக்குழு கடந்த வருடத்தினைப் போன்றே 2026 ஆம் வருடத்திற்கும் மாகாணங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ள வருமானத்தின் ஒரு பங்கினை மாகாண மூலதன செலவினத் தேவைப்பாடுகளுக்காக ஈடுசெய்வதற்கு பரிந்துரை மேற்கொள்வதோடு, அதற்கமைய 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட ஒட்டுமொத்த வருமான இலக்கின் 50% இனை மூலதன செலவிற்கு ஈடுசெய்வது உசிதமானது என பரிந்துரை செய்யப்படுகின்றது.(இவ்வறிக்கையின் 3.2 இல் முன்மொழியப்பட்டுள்ளவாறு மூலதன ஒதுக்கீடானது மாகாண வருமானத்திற்கு ஈடுசெய்யப்படின்) அவ்வாறு ஈடுசெய்த பின்னர் மாகாணங்களுக்கு பரிந்துரைக்கப்படும் மூலதன ஒதுக்கீட்டுத் தொகை கீழே அட்டவணை 13இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 13:மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியுடன் வருமான இலக்குகளை ஈடுசெய்த பின் 2026ஆம் ஆண்டுக்காக பரிந்துரைக்கப்பட்ட மூலதன மானிய நிதியின் பெறுமானங்கள்

மாகாணம்	***பரிந்துரைக்கப்பட்ட மூலதன மானிய நிதி (ரூ. மில்லியன்)***		
	வருமானத்தினை ஈடுசெய்ததன் பின்னர் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி	***பிரமாண அடிப்படையிலான மானிய நிதி***	***மொத்தம்***
மேல்	*9,767.00*	*1,386.00*	*11,153.00*
மத்திய	*12,977.00*	*1,715.00*	*14,692.00*
தென்	*12,415.00*	*1,645.00*	*14,060.00*
வட	*13,564.00*	*1,719.00*	*15,283.00*
வடமேல்	*12,142.00*	*1,633.00*	*13,775.00*
வடமத்திய	*12,835.00*	*1,692.00*	*14,527.00*
ஊவா	*14,197.00*	*1,784.00*	*15,981.00*
சப்ரகமுவ	*13,151.00*	*1,733.00*	*14,884.00*
கிழக்கு	*13,599.50*	*1,693.00*	*15,292.50*
மொத்தம்	***114,647.50***	***15,000.00***	***129,647.50***

ஒவ்வொரு மாகாணத்தினதும் மூலதன செலவினத் தேவைகளை வருமான இலக்குகளோடு ஈடுசெய்வதன் விரிவான பெறுமானங்கள் இவ்வறிக்கையின் பின்னிணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

4.1.2. 2026 மூலதன மானிய நிதி தொடர்பிலான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அரசினால் தீர்மானிக்கப்படும் உச்ச எல்லை செலவின வரையறைகள்

நிதி ஆணைக்குழுவினால் முறையான நடவடிக்கையொன்றினை பின்பற்றி மாகாண சபைகளுக்கு 2026 ஆம் ஆண்டிற்கான மூலதன தேவைப்பாட்டினை அரசியலமைப்பின் 154ண (3) இலுள்ள தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு மேற்கூறியவாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறிருப்பினும், 2025 – 2030 காலப்பகுதிக்கான நடுத்தர கால அரச நிதி சட்டகத்திற்கு இணைவாக பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க 2026 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளின் மூலதன மானிய நிதிக்காக காட்டப்பட்டுள்ள உச்ச எல்லை மானிய நிதி வரையறை 77 பில்லியன் ரூபாயாகும். (குறித்த தொகை இவ்வாணைக்குழுவினால் ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் பரிந்துரை செய்யப்படும் விகிதங்களுடன் ஒப்பிட்டு 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட வரைவில் காட்டப்பட்டுள்ளது) குறித்த உச்ச எல்லை மானிய நிதி வரையறை நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தொகையில் 52% வீதம் எனினும், கடந்த ஆண்டுகளில் பாதீட்டினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதியுடன் ஒப்பிடுகையில் இம்முறை ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது ஒப்பீட்டளவில் உயர் பெருமானத்தினைக் கொண்டுள்ளது. (உதாரணமாக எடுத்துக்கொண்டால் 2019 – 2024 காலப்பகுதியில் பாதீட்டினால் வழங்கப்பட்ட நிதி குறித்த வருடத்திற்காக ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட நிதியில் கிட்டத்தட்ட 26% ஆக இருந்தது). இந்நிலைமையின் கீழ் மேற்குறிப்பிட்ட உச்ச எல்லை மானிய நிதி வரையறைகளை

அடிப்படையாகக் கொண்டு 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டுமென ஆணைக்குழுவினால் மாகாண பிரதம செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

4.1.3. 2026 ஆம் ஆண்டிற்குள் மூலதன செலவினங்களை ஏற்றுக்கொள்வதை முன்கூட்டியே திட்டமிடல்

முன்னர், பாராளுமன்றத்தினால் உரிய ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டத்தினை நிறைவேற்றிய பின்னர் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பது தொடர்பில் நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் வழிகாட்டல்களுடன் ஒவ்வொரு ஆண்டிலும் மாகாண சபைகளுக்காக பாதீட்டினால் ஒதுக்கப்படும் நிதி மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட்டது. குறித்த வழிகாட்டல்களுக்கமைய மாகாண சபை அதிகாரிகளினால் தயாரிக்கப்படும் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் நிதி ஆணைக்குழுவிடம் கிடைக்கப்பெற்றதும் இவ்வறிக்கையின் 2 ஆவது அத்தியாயத்தின் 2.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தினைப் பின்பற்றிய பின்பு நிதி ஆணைக்குழுவினால் முன்மொழியப்படும் திருத்தங்களுடன் ஆணைக்குழுவின் ஒப்புதலானது மாகாண அதிகாரிகளுக்கு மார்ச் மாதத்தில் அறிவித்து அனுப்பப்படும். அந்நிலைமையின் கீழ் (தொடர் வேலைகள் தவிர்ந்த) வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை செயற்படுத்துவதற்கு வெறும் 9 மாத காலமே எஞ்சியிருக்கும். (நிரல் அமைச்சுக்களினால் அவ்வாறான திட்டங்கள் பின்பற்றப்படாவிட்டாலும் பாதீட்டு முன்மொழிவுகளினால் குறித்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட செயலகங்கள் / மாவட்ட அலுவலகங்களுக்கு இக்காலப்பகுதியில் அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டன).

முன்பு காலதாமதமின்றி எதிர்வரும் வருடத்திற்கான ஒதுக்கீட்டு எல்லைகளை மாகாண சபை அதிகாரிகளுக்கு அறிவிப்பது கடினமான செயற்பாடாக இருந்ததன் காரணம் நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நிதியில் எவ்வளவிலான சதவீதம் பாதீட்டினால் ஒதுக்கப்படுகின்றது என்பதை முன்கூட்டியே எதிர்வு கூறுவதற்கு முடியாமலிருத்தல் ஆகும். அவ்வாறிருப்பினும், 2026 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபைகளும் உள்ளிட்ட ஒவ்வொரு அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 15 ஆவது உறுப்புரைக்கமைய முன்கூட்டியே தீர்மானித்து, வருடாந்த ஒதுக்கீட்டு சட்ட வரைவிற்கு அந்நிதியியே உள்ளடக்கபடுவதால் 2026 ஆம் ஆண்டிற்காக மாகாண சபைகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்பதை நம்பகரமாக மாகாண சபைகளுக்கு அறிவிப்பதற்கு தற்பொழுது சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.ஆகையால், எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்த மூலதன மானிய நிதி தொடர்பாக மாகாண சபைகளை முன்கூட்டியே அறிவுறுத்தி குறித்த நிறுவனங்களின் திட்டமிடல் நடவடிக்கையினை துரிதமாக ஆரம்பிப்பது நிதி ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாக இருந்ததோடு கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையுடன் மாகானா சபை பாதீடு தொடர்பில் 2025 செப்டெம்பர் 11ஆந்திகதி சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போது மேற்கூறியவாறு செயற்படுவதாக ஜனாதிபதி அவர்களினால் அறிவிக்கப்பட்டது.

அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிற்காக மாகாண சபைகளுக்கு வருடாந்த பாதீட்டினால் ஒதுக்கப்பட உத்தேசித்துள்ள நிதி, மேலே 4.1.1 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சதவீதங்களுக்கமைய மாகாண சபைகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. குறித்த ஒதுக்கீட்டினை பயன்படுத்தி வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்கும் விதம் பற்றி அவர்களுக்கு அனுப்பப்பட்ட வழிகாட்டல்களைப் பின்பற்றி 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்குமாறு மாகாண சபைகளுக்கு 2025.10.07 ஆந்திகதி அறிவிக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க நிதிசார் முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தினால் குறிப்பிட்டுள்ளவாறு அரச முதலீட்டுகளின் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக அபிவிருத்தி திட்டத்தினுள் உள்ளடக்கப்படும் அனைத்து கருத்திட்டங்களும்/ செயற்பாடும் (மாகாண நிதிக்கட்டளைச் சட்டத்தில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கமைய) முறையான மதிப்பீட்டிற்குட்படுத்தப்படுவது அத்தியாவசியமாகும் எனவும், அவ்வாறு செய்ததாக பிரதம செயலாளர் மூலமாக தெரிவித்தலொன்றினை உள்ளடக்குமாறும் இம்முறை அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மூலதன மானிய நிதியின் அளவு எவ்வளவு என்ற விபரம் கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அதற்கமைய ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் வெவ்வேறாக அறிவிக்கப்பட்டதோடு, மேல் மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவ்வழிகாட்டல்களின் பிரதி பின்னிணைப்பு II என இதில் இணைக்கப்பட்டுள்ளது.)

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களுக்கிணங்க, 2026 ஆம் ஆண்டிற்காக மாகாண சபைகளினால் தயாரிக்கப்படும் வருடாந்த திட்டங்களை 2025 நவம்பர் 15 ஆந்திகதிக்கு முன்னர் நிதி ஆணைக்குழுவிடம் முன்வைக்குமாறு பிரதம செயலாளர்களுக்குஅறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதோடு, குறித்த திட்டங்கள் அதற்குரிய அனைத்து உரித்தாளர்களினதும் பங்குபற்றலுடன் மீளாய்வு செய்து குறித்த வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காக 2025.12.31 ஆந்திகதிக்கு முன்னர் நிதி ஆணைக்குழுவின் ஒப்புதலை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 14: 2026 பாதீட்டில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் என எதிர்வு கூறப்பட்ட மூலதன மானிய நிதி (மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி மற்றும் பிரமாண அடிப்படையிலான மானிய நிதி)

(ரூ.மில்லியன்.)

மாகாணம்	***மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி***	***பிரமாண அடிப்படையிலான மானிய நிதி***	***கூட்டுத்தொகை***
மேல்	*6,403*	*600*	*7,003*
மத்திய	*7,921*	*743*	*8,664*
தென்	*7,602*	*713*	*8,315*
வட	*7,942*	*745*	*8,687*
வடமேல்	*7,547*	*708*	*8,255*
வடமத்திய	*7,817*	*733*	*8,550*
ஊவா	*8,240*	*773*	*9,013*
சப்ரகமுவ	*8,004*	*751*	*8,755*
கிழக்கு	*7,824*	*734*	*8,558*
கூட்டுத்தொகை	***69,300***	***6,500***	***75,800***

4.2. மாகாண சபைகளுக்கு திரள் மானிய நிதியினைப் பரிந்துரை செய்தல்

மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் திரள் மானிய நிதி, உரிய மாகாண சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், மத்திய அரசினால் மாகாண சபைகளுக்கு மாற்றப்படும் வருமானம் மற்றும் மாகாண சபைகளுக்கு இறுதியாக மதிப்பிடும் மீண்டெழும் செலவினத் தேவைப்பாட்டின் மீது தங்கியுள்ளது.

விவேகமான முறையொன்றில் மீண்டெழும் செலவினங்களை திட்டமிடும் தேவைப்பாட்டினைக் குறிப்பிட்டு நிதி ஆணைக்குழுவினால் 2025 மார்ச் 07 ஆந்திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க மாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்ட மீண்டெழும் பாதீட்டுத் தேவைகளைப் பற்றி கவனத்திற் கொண்ட பின்னர் மீண்டெழும் தேவைப்பாடுகள் மற்றும் மாகாண பன்முகப்படுத்தப்பட்ட வருமான இலக்குகளை மதிப்பிடுவதற்கு நிதி ஆணைக்குழுவினால் உரிய மாகாண அதிகாரிகள், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் கலந்துரையாடல் தொடரொன்று ஒழுங்கமைக்கப்பட்டது.

மாகாண சபைகளுக்காக வழங்கப்படும் மீண்டெழும் நிதியினை தீர்மானிக்கும் இறுதி செயன்முறையின் போது, அண்மையில் நிரல் அமைச்சுக்களால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் மாகாண வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்களினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கருத்திற் கொள்ளப்பட்டது.

4.3. மாகாண வருமானத்தினை மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளுடன் ஈடு செய்தல்

பொதுவாக பொது திறைசேரியினால் மாகாண வருமானத்தினை திரள் மானிய நிதியுடன் ஈடு செய்தாலும், மாகாண சபைகளை தாபிக்கும் மற்றும் சில வருமான மூலங்களை மாகாண சபைகளுக்கு பொறுப்பளிப்பதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகளின் நோக்கம் அதுவல்ல.

ஆகையால் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் நிதி ஆணைக்குழுவினால், மாகாண பன்முகப்படுத்தப்பட்ட வருமானத்தினை மாகாண மூலதன மானிய மிதியுடன் ஈடுசெய்து மாகாணத்தினுள் பலமான சமமான அபிவிருத்தியினை உருவாக்குவதற்கு உறுதியாக பரிந்துரை செய்யப்பட்டது. அப்பரிந்துரைகள் கௌரவ ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் 2025 ஆண்டிலும் அவை செயற்படுத்தப்படவில்லை. உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்படும் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் தவிர்த்த 2026 ஆம் ஆண்டிற்கான மாகாண வருமான இலக்கு 34,704.5 மில்லியன் ரூபாயாகும்.மாகாண வருமானத்தினை முழுமையாக மாகாண மீண்டெழும் செலவுகளோடு ஈடுசெய்வதற்குப் பதிலாக 2026 ஆம் ஆண்டிற்காக அதில் 50%இனை மூலதன மானிய நிதியுடனும் மிகுதி 50% தொகையினை மீண்டெழும் செலவுகளுடன் ஈடுசெய்வதற்கும் நிதி ஆணைக்குழு இம்முறையும் பரிந்துரை மேற்கொள்ளும்.

வளப் பாய்ச்சல் மாகாண சபைகளுக்கிடையே அறிவார்ந்த முறையில் பகிரப்பட்டுள்ளதால் இம்முன்மொழிவின் மூலம் எந்தவொரு மாகாணத்திற்கும் விசேட நன்மை கிட்டுவதில்லை என்பதனை (பொது திறைசேரியினால் வழங்கப்படும் முழுமையான மூலதன மானிய நிதி மற்றும் அதனோடு ஈடுசெய்யப்பட மாகாண வருமானத்தின் கூட்டுத்தொகை மொத்த மூலதன மானிய நிதி என்பதால்) நிதி ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்த முடியும்.

13 ஆம் அரசியலமைப்பின் 154ண (3) உறுப்புரைக்கமைய, பொது திறைசேரியின் அதிகாரிகள் உட்பட உரிய அனைத்து தரப்பினரதும் பங்குபற்றலுடன் மாகாண சபைகளுக்கு போதியளவு நிதி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 2026 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினமாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த ஒதுக்கீட்டுத் தொகை 692,416 மில்லியன் ரூபாயென நிதி ஆணைக்குழுவின் இலக்கம் FC/RCA/GEN/06/01/2026 மற்றும் 2025.08.14 திகதியுடைய கடிதத்தின் மூலம் பொது திறைசேரிக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது

அவ்வாறிருப்பினும், 2024 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் நியமங்களுக்கமைய, பொது திறைசேரியினால் 2026 – 2030 நடுத்தர கால அரச நிதி சட்டகத்தினுள் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள செலவின எல்லையின்படி மாகாண சபைகளுக்கு 2026 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டு எல்லை பற்றி பொது திறைசேரியின் செயலாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த உச்ச எல்லை வரையறைகள் (Binding Ceilings) 2026 ஆம் ஆண்டிற்காக வரைவு செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டுச் சட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அதற்கமைய, மாகாண சபைகளுக்கு வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள திரள் மானிய நிதி 533,000 மில்லியன் ரூபாயாகும்.

எவ்வாறாயினும், எதிர்வு கூறப்பட்ட மாகாண வருமானத்தினை ஈடுசெய்ததன் பின்னர் நிதி ஆணைக்குழுவினால் சிறந்த மதிப்பீட்டுடன் மேற்கொண்ட பரிந்துரைகளிலும் பார்க்க குறைவான ஒதுக்கீட்டுத் தொகையொன்று (உச்ச எல்லை வரையறையாக) மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் காலங்களில் கீழ் குறிப்பிட்டுள்ள பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

- *(i) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் மேற்கொள்ளும் புதிய நியமனங்களுக்கான சம்பளக் கொடுப்பனவிற்கு மேலதிக ஒதுக்கீட்டினை வழங்க வேண்டி ஏற்படல்.*

(ii) தேசிய மட்டத்தில் புதிய நியமனம் வழங்கி மாகாண சபைகளுக்கு இணைக்கப்படும் ஆளணியினருக்காக மேலதிக ஒதுக்கீட்டினை வழங்க வேண்டிய தேவை ஏற்படல்.

(iii) மேலதிக நேரக் கொடுப்பனவு குறிப்பாக சுகாதார துறையின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின சம்பளம் வழங்குவதற்கு போதியளவு ஒதுக்கீடு இல்லாதிருத்தல்.

(iv) மாகாண அரச சேவை அதிகாரிகளுக்கு கடன் வசதிகளை வழங்குவதில் காணப்படும் சிரமம் காரணமாக எதிர்வரும் காலங்களில் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க நேரிடல் (இவ்வசதிகள் ஏனைய அரச அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன)

(v) நிலுவை சம்பளக் கொடுப்பனவிற்கு போதியளவு ஒதுக்கீடு காணப்படாமை.

(vi) பாடசாலைகளின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கு தேவையான ஒதுக்கீடு காணப்படாமை.

(vii) மாகாண நிறுவனங்களை கொண்டு நடாத்துகையில் தேவைப்படும் சேவைகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பிரச்சனைகள் எழல்.

(viii) கட்டடம் மற்றும் கட்டுமானங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்வதில் சிரமம் ஏற்படல்.

அதற்கமைய, 2026 ஆம் வருடத்தினுள் தினசரி மாகாண அரச சேவைகள் மற்றும் புதிய அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் ஏற்படக்கூடிய மேற்குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்பாகவும் கவனத்திற்கொள்வது உசிதமானது என்பது நிதி ஆணைக்குழுவின் கருத்தாகும்.

அத்தியாயம் 5

விசேட பரிந்துரைகள்

மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு உகந்தவாறு அரசினது ஒட்டுமொத்த அபிவிருத்தி மூலோபாயத்திற்கு குறைநிரப்பும் வகையில் அரசினால் செயற்படுத்துவது சிறந்தது எனத்தோன்றும் பரிந்துரைகள் சில இவ்வத்தியாயத்தில் உள்ளடங்கியுள்ளது.

(1) காலதாமதமின்றி திட்டமிடுவதன் மூலம் 2026 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களை காலதாமதமின்றி செயற்படுத்துதல்.

எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி, 2025 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட மூலதன மானிய நிதியிலும் நிரல் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாதீட்டு ஒதுக்கீடுகளிலும் செலவு செய்யப்பட்ட தொகை ஒப்பீட்டளவில் குறைந்த சதவீதமாகும். இதற்கு தாக்கம் செலுத்தியுள்ள ஒரு முதன்மைக் காரணம் யாதெனில் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களினால் 2025 ஆம் ஆண்டிற்கான கருத்திட்டங்களை திட்டமிடும் செயன்முறை இவ்வருடத்திற்கான ஒதுக்கீட்டு சட்ட வரைவு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்டமை, அதாவது 2025 மார்ச் 21 ஆந்திகதிக்கு பின்னராக இருப்பதாகும்.இதற்கு முன்னைய வருடங்கள் தொடர்பில் பார்க்கும்போது காணக்கிடைக்கும் பலவீனம் யாதெனில் குறித்த நிறுவனங்களினால் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக முன்னாயத்தம் இல்லாதிருப்பதாகும்.எதிர்வரும் ஆண்டிற்காக (மாகாண சபைகளும் உள்ளிட்ட) ஒவ்வொரு அரச நிறுவனங்களுக்காக தீர்மானிக்கப்படும் ஒதுக்கீடு தொடர்பாக குறித்த வருடத்திற்குரிய ஒதுக்கீட்டு சட்ட வரைவில் குறிப்பிடப்படும் தகவல்கள் நடைமுறை ஆண்டின் 4ஆவது தவணையாகும் போது பிரசித்தபடுத்தப்படுவதால் குறித்த தகவல்களைப் பயன்படுத்தி எதிர்வரும் வருடத்திற்கான அபிவிருத்தி திட்டங்களை காலதாமதமின்றி தயாரித்துக் கொள்ளும் இப்பலவீனத்தினை திருத்திக்கொள்வதற்கான ஒரு தீர்வாக இருக்கக்கூடியதாக இருந்திருக்கும். அவ்வாறிருப்பினும்,அரச நிதி தொடர்பில் முழுமையான அதிகாரத்தினைக் கொண்டுள்ள பாராளுமன்றத்தினால் ஒதுக்கீட்டு சட்ட வரைவில் குறிப்பிடப்படும் ஒதுக்கீடுகள் அவ்வாறே நிறைவேற்றப்படும் என்பது குறித்து உறுதிப்பாடொன்று காணப்படாமையினால் குறித்த தகவல்கள் உயரிய நம்பகத்தன்மையுடன் திட்டமிடல் நடவடிக்கைக்காக பயன்படுத்திக்கொள்வதற்கான சிரமம் இந்நிலைமையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

அவ்வாறிருப்பினும், 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமானது 2026 ஆம் ஆண்டுக்கமைய தற்போது நடைமுறையாவதால் குறிப்பிட்ட சட்டத்தில் 15 ஆவது உறுப்புரை பிரகாரம் ஏற்கனவே பொது திறைசேரியினால் தீர்மானித்துள்ள உச்ச எல்லை வரையறைக்கமைய (Binding Ceilings), ஒதுக்கீட்டு சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்கு கட்டுப்பட்டு குறித்த சட்ட வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள செலவின எல்லைகள் உயரிய நம்பகத்தன்மையுடன் 2026 ஆம் ஆண்டின் திட்டங்களுக்கான அடிப்படையாகக் கொள்வதற்கு தற்போது அவகாசமுள்ளது.

மேற்குறிப்பிட்ட விசேட நிலைமையினைக் கருத்திற் கொண்டு மாகாண சபைகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீட்டினை மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஆணைக்குழுவினால் இவ்வறிக்கையின் 4.1.1 பந்திக்கமைய பரிந்துரை செய்யப்பட்டுள்ள சதவீதங்களுக்கமைய, மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அதற்கமைய 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் நிதி ஆணைக்குழுவினால் 2025 ஒக்டோபர் 07ஆந்திகதி மாகாண பிரதம செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. குறித்த வழிகாட்டல்களின்படி தயாரிக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் 2025.11.15 ஆந்திகதிக்கு முன்னர் நிதி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட வேண்டியதோடு, குறித்த அனைத்து தரப்பினரதும் பங்குபற்றலுடன் குறிப்பிட்ட திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அவற்றிற்காக நிதி ஆணைக்குழுவின் ஒப்புதல் 2025.12.31 ஆந்திகதியாகும் போது வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.(தயவு செய்து இவ்வறிக்கையின் 4.1.2 இனைப் பார்க்கவும்)

நிரல் அமைச்சுக்களுக்கும் மேற்குறிப்பிட்ட முறையினை பயன்படுத்தப்படுவதாயின் 2026 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டினை பயன்படுத்தி செயற்படுத்த எதிர்பார்த்துள்ள கருத்திட்டங்களை முன்கூட்டியே திட்டமிட முடியும். ஒவ்வொரு வருடத்திற்காகவும் நிரல் அமைச்சுக்களால் தமது பிரதேச அலுவலகங்களினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களை முன்கூட்டியே அறிந்துகொண்டு அவற்றை மாகாணத்தின் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடக்கி இரட்டிப்பினைத் தவிர்ப்பதற்காக நிதி ஆணைக்குழுவினால் கடந்த காலத்தில் எடுத்த முயற்சி வெற்றியடையாததற்குக் காரணம் குறிப்பிட்ட நிரல் அமைச்சுக்கள் பெரும்பாலானவற்றால், முன்கூட்டியே திட்டங்களை தயாரிக்காமையாகும்.ஆகையால், இப்பந்தியில் குறிப்பிட்டவாறு மாகாண சபைகள் தொடர்பில் 2026 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்கள் நிரல் அமைச்சுக்களுக்காகவும் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் நிரல் அமைச்சுக்களால் நடைமுறைப்படுத்தப்படும் குறித்த கருத்திட்டங்கள் மாகாண சபை அபிவிருத்தி திட்டங்களுடன் சிறப்பாக ஒருங்கிணைப்பதன் மூலம் இரட்டிப்பினைத் தடுத்து வினைத்திறனாக அரச முதலீடுகளை பயன்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். நிரல் அமைச்சுக்களுக்கும் இதன்மூலம் கிடைக்கப்பெறும் விசேட நன்மையாவது வருடத்திற்குரிய ஒதுக்கீடுகளில் அதிக சதவீதத்தினை பயன்படுத்திக்கொள்ள முடிவதாகும்.

(2) நுண் மற்றும் சிறு பரிமாண முயற்சியாண்மை அபிவிருத்தியின் போது தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை உடனிகழ் முறையில் செயற்படுத்துவதற்கான தேவைப்பாடு

மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள விவசாய மற்றும் கால்நடை போன்ற விடயங்களுக்குரிய நுண் மற்றும் சிறு பரிமாண வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெருமளவானவை குறித்த நடவடிக்கையின் செலவினத்தின் 50% (மீண்டும் அறவிடப்படாத) மானியமாக மாகாண சபையினால் வழங்கப்படும் மிகுதி 50% பயனாளியினால் பொறுப்பேற்கப்படும் அடிப்படையில் செயற்படும் நிகழ்ச்சித்திட்டங்களாக செயற்படுத்தப்படுகிறது. மாகாண சபை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை பகுப்பாய்வு செய்கையில் இந்நடவடிக்கை கூடுதலாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, கடற்றொழில், சிறு கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, கூட்டுறவு ஆகிய விடயங்களுக்காக செயற்படுத்தப்பட்டுள்ளதாகத் தென்படுகின்றது. கிராமிய மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்ட இந்நடவடிக்கை மூலமாக புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய சாகுபடி முறைகளை அறிமுகப்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

மாகாண சபைகளினால் பெற்றுக்கொண்ட தகவல்களின்படி, தென்படுவது விவசாயம், கால்நடை மற்றும் நன்னீர் மீன்பிடி ஆகிய துறைகளுக்கு மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் கீழ் வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டின் கிட்டத்தட்ட 30% இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதாகும். அதேபோல், கிராமிய அபிவிருத்தி, சிறு கைத்தொழில் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆகிய பிரிவுகளின் மொத்த ஒதுக்கீட்டின் 7% - 10% வரையிலான தொகை இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயத் துறை தொடர்பில் எடுத்துக்கொண்டால் உயர் தரத்திலான விதைகள் மற்றும் நடவுப்பொருட்களை பெற்றுக்கொடுத்தல், விவசாயக் கிணறுகளை நிர்மாணித்தல், மின்னுற்பத்தி இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்தல், மழைக்கான மூடுகைகளை நிர்மாணித்தல், பரஷூட் தட்டுக்களை பெற்றுக்கொடுத்தல்,விவசாய அமைப்புக்கள் மற்றும் பொதிப்படுத்தல் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்தல்,பாதுகாப்பு வேலியினை அமைத்தல், வாயுத் துப்பாக்கிகளை வழங்குதல், பாதுகாப்பான மனைகளுள் சாகுபடிக்கான பொருட்களை வழங்குதல், சிறந்த விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்தல்(GAP - Good Agricultural Practice), நீர் விநியோக உபகரணங்களை வழங்குதல் ஆகியன உள்ளடங்கியது. கால்நடை வளர்ப்புத் துறை தொடர்பில் எடுத்துக் கொண்டால் கோழி வளர்ப்பு, பால் பண்ணை, பன்றி வளர்ப்பு மற்றும்

ஆட்டுப் பண்ணை அபிவிருத்தித் துறைகள் உள்ளடங்கின.இதற்கு மேலதிகமாக நன்னீர் மீன்பிடி கைத்தொழிலின் கீழ் படகுகள், வலைகள் போன்ற மீன்பிடி உபகரணங்களை வழங்குதல், அலங்கார மீன் வளர்ப்பு, சிறு கைத்தொழில் மற்றும் வேறு சுயதொழில்களுக்காக 50% பயனாளியின் பங்களிப்பின் கீழ் சிறிய அளவிலான கைத்தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் வழமை போன்று ஒவ்வொரு வருடமும் செயற்படுத்தப்படுவது எந்த அளவிற்கு பயனுள்ளதாகும் என்பது பற்றி மாகாண சபைகளில் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுக் கூட்டங்களில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. எதிர்பார்த்தவாறு புதிய தொழில்நுட்பம் பிரபலமடையவில்லை எனவும், மாகாண சபை நேரடி நிதி உதவி வழங்குவதிலிருந்து விலகியவுடன் சிறந்த விவசாய நடைமுறைகளை (GAP) விவசாயிகள் கைவிடுவதாகவும் தெளிவாகியது. குறிப்பிட்ட கலந்துரையாடல்களின் போது கீழ்குறிப்பிட்ட நிலைமைகள் கவனிக்கப்பட்டது.

i. *மாகாண சபைகளினால் வழங்கப்படும் 50% பங்களிப்பானது மீள் அறவிடப்படாத மானியம் என்பதால் வெறுமனே அம்மானியத்தினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் பெரும்பாலானவர்கள் அதில் இணைந்து கொண்டாலும், அவர்களுள் பெரும்பாலானவர்களுக்கு அப்பணிக்கான உண்மையான தேவைப்பாடோ அல்லது அதற்கான அர்ப்பணிப்போ இல்லாதிருந்தமை மற்றும் உரிய செயற்பாட்டிற்கான வணிகத் திட்டமொன்று மற்றும் திறமை அவர்களிடம் இல்லாதிருத்தல்.*

ii. *எதிர்பார்த்தவாறு வருமானத்தினை உருவாக்கத் தவறிய சில கருத்திட்டங்கள் / செயற்பாடுகளுக்காக தன்னிடமுள்ள தனிப்பட்ட நிதியினையும் அதற்காக செலுத்தியதினால் பயனாளிகளுக்கு குறிப்பிட்ட செயற்பாடுகள் பொருளாதார ரீதியில் பயனற்ற செயற்பாடுகளாக மாறியமை.*

iii. *குறிப்பிட்ட செயற்பாட்டின் செலவினை கணக்கிடுகையில் அரசின் மானியமானது பயனாளிகளினால் கணக்கிடப்படாமையினால் அச்செயற்பாடு இலாபகரமற்ற சந்தர்ப்பங்களிலும் கூட இலாபகரமானதாக தெரிதல்.*

iv. *மாகாண சபைகளினால் 50% பங்களிப்பு வழங்கப்படுவது முன்பு தீர்மானிக்கப்பட்ட அதிகபட்சத்திற்கு கட்டுப்பட்டு என்பதால் தொழில்முனைவோர்களாக மேம்பட ஆற்றலுள்ள ஆனால் மூலதனத்தினை உருவாக்கிக்கொள்ள முடியாதவர்களுக்கு தமது நடவடிக்கைகளை இலாபகரமற்ற பரிமாணத்திற்கு மட்டுப்படுத்த வேண்டி ஏற்படல்(ஆனால் கடன் தொகையாக இந்நிதியுதவி வழங்கப்படுமாயின் கருத்திட்டம் / செயற்பாட்டிற்காக ஏற்கவேண்டிய முழுச் செலவினையும் பயனாளிக்கு வழங்கவும் முடியும்)*

கடந்த 05 வருட காலத்தில் மாகாண சபைகளினால் (2021 - 2025) 50% அரசின் நேரடி பங்களிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் அரசின் பங்களிப்பு கிட்டத்தட்ட 4,600 மில்லியன் ரூபாயாகும் . அதற்ன் மூலம் தெரிய வருவதாவது குறிப்பிட்டே தொகையோ அல்லது அதற்கு அதிகமான பங்களிப்பினை அக்கருத்திட்டங்களுக்காக பயனாளிகள் பொறுப்பேற்றுள்ளனர் என்பதாகும். அதற்கமைய, அக்கருத்திட்டங்கள் எதிர்பார்த்தவாறு வெற்றியடையாமை காரணமாக அரசின் பங்களிப்பு அதேபோல் பயனாளிகளினால் பொறுபேற்கப்பட்ட பங்களிப்பும் வீணடிக்கப்படும்.

ஆகையால், இத்திட்டத்தினை வழமை போன்று மீண்டும் மீண்டும் செயற்படுத்துவதற்கு முன்னர் அவற்றின் வெற்றி தொடர்பில் மதிப்பீடு ஒன்றினை முன்னெடுப்பது உசிதமானது என மாகாண அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.அதற்கமைய சப்ரகமுவ மாகாண சபை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நுண்/சிறு பரிமாண வீடு சார்ந்த கோழி வளர்ப்பிற்கான கருத்திட்டங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியிலான அடிப்படையில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதன்மூலமும் மேற்குறிப்பிட்ட அவதானிப்புக்கள்

உறுதிப்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.கடந்த வருடங்களிலும் விசேடமாக 2025 ஆம் ஆண்டில் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிய கலந்துரையாடல்களின் போதும் மேற்குறிப்பிட்ட நலப்பயன் பங்களிப்பு திட்டத்திற்குப் பதிலாக அரசின் நன்கொடை வட்டியற்ற/ எளிய வட்டி மீதான கடனொன்றாக பயனாளிகளுக்கு வழங்கப்படுவதன் பொருத்தப்பாட்டினைப் பற்றியும் மாகாண சபை அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர். அதற்கமைய கிட்டத்தட்ட அனைத்து மாகாண சபைகளினாலும் 2025 ஆம் ஆண்டில் நேரடி மானிய நிதிக்குப் பதிலாக வட்டியற்ற/ சலுகைக் கடன் முறைகளை செயற்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மாகாண சபை அதிகாரிகளின் மூலம் பிரதேச செயலாளர்கள் மற்றும் உரிய வெளிக்கள உத்தியோகத்தர்களினதும் உதவியினைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அரச வங்கியொன்றினூடாக அப்பணத்தினை பெற்றுக்கொடுக்கும் செயற்பாடு இடம்பெறுகிறது. மாகாண சபையினால் குறித்த செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஆரம்ப முதலீடாக கடன் வழங்கும் வங்கிக்கு பெற்றுக்கொடுக்கப்படுவதோடு நிர்வாகச் செலவாக வங்கியுடன் இணங்கிய தொகையொன்று வழங்கப்படும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. மீள் செலுத்தப்படும் கடன்தொகை மாகாண சபையில் இப்பணிக்காக தாபிக்கப்பட்டுள்ள சுழற்சி நிதியமொன்றிற்கு வரவு வைக்கப்படுவதால் இத்திட்டத்தின் நிலைபேறான தன்மையும் அதன்மூலம் காக்கப்படுகிறது.

இருப்பினும் மாகாண சபைகளினால் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தடங்கல் யாதெனில் அப்பிரதேசங்களின் பயனாளிகளுக்கு நிரல் அமைச்சுக்கள், (மத்திய) அரசின் திணைக்களங்கள் மற்றும் மகாவலி அதிகார சபை ஆகிய நிறுவனங்களினால் குறித்த விடயங்களுக்காகவே (மீள அறவிடப்படாத) நிதியுதவியினை வழங்குவதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனையொத்த கருத்திட்டங்கள் நடைமுறைப்படுதப்படுவதாகும்.

(i) *கமத்தொழில் (நிரல்) அமைச்சினால் (விவசாய துறைக்குரிய) பழப் பயிர்ச்செய்கை, உள்ளூர் கிழங்கு வகைகள் , பாதுகாப்பான வீடுகளுள் மேற்கொள்ளும் பயிர்ச்செய்கை, காளான் பயிர்ச்செய்கை, தேனீ வளர்ப்பிற்காக 50% அரச பங்களிப்பின் கீழ் அதிகபட்சம் 500,000 ரூபாய் நிதியுதவி வழங்குதல்.*

(ii) *அதேபோல் அதே அமைச்சில் கால்நடை அபிவிருத்தியின் கீழ் கோழி வளர்ப்பு (முட்டை மற்றும் இறைச்சிக்காக), கறவை மாடு வளர்ப்பு, ஆட்டுப்பண்ணை அமைத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களும் நேரடி நிதியுதவியின் கீழ் செயற்படுத்தல்.*

(iii) *கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் மேற்கூறியவாறான வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக உயர்ந்தபட்சம் 200,000 ரூபாய் நிதியுதவி வழங்குதல்.*

(iv) *மகாவலி அதிகார சபையினால் 50% நிதிப் பங்களிப்பின் கீழ் விவசாய உபகரணங்களை வழங்குதல்.*

(v) *சமுர்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் கீழ் 50% பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.*

இவ்வாறாக ஒரே கிராமத்தில் ஒரே மாதிரியான பயனாளிகளுக்காக ஒரே வடிவத்திலான மானியம் வழங்கும் நடவடிக்கை (மத்திய) அரசின் நிறுவனங்கள் போன்றே மாகாண சபைகளினாலும் இரு வகையாக செயற்படுத்துகையில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகின்றது.அவ்வாறான நிலைமைகளின் கீழ் மாகாண சபையின் பங்களிப்பு நேரடி மானிய நிதியாகவன்றி வட்டியற்ற கடன்/ சலுகைக் கடனாக வழங்கும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பொதுமக்களை பங்கேற்க வைப்பது கடினமாக இருக்கக்கூடும்.

ஆகையால், வாழ்வாதார அபிவிருத்திக்காக நுண் மற்றும் சிறு பரிமாண பொருளாதார நடவடிக்கை மேம்பாட்டிற்காக செய்யப்படும் முதலீட்டினால் உயர்ந்தபட்ச பயனைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறும் பயனாளிகளை தங்கிவாழும் மனநிலையிலிருந்து விலக்கி முயற்சியாண்மை மனநிலையில் செயற்பட ஊக்குவிப்பதன் மூலமும் நிலைபேறான

அபிவிருத்தியொன்றினை அடைய வேண்டுமெனில் இது தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்வதன் தேவை உள்ளது.

ஆகையால், மீளறவிடப்படாத வாழ்வாதார அபிவிருத்திக்கான நன்கொடை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்கு மாத்திரம் செயற்படுத்துவதும் வெறுமனே பொருளாதார நடவடிக்கை ஒன்றினை ஆரம்பிப்பதற்கு வழங்கப்படும் ஏனைய அனைத்து நிதியுதவிகளும், வட்டியற்ற / சலுகைக் கடன் முறையொன்றின் கீழ் பயனாளிகளுக்கு வழங்குவதும் உசிதமானதென நிதி ஆணைக்குழு முன்மொழிகின்றது.

(i) விசேட தேவையுள்ள நபர்கள்

(ii) நன்னடத்தை காலம் முடிவுற்று சமூகத்தில் இணையும் நபர்கள்

(iii) நீண்டகால நோய் நொடி காரணமாக போட்டித்தன்மையுடன் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நபர்கள்

(iv) தனிநபராக பிள்ளைகளை வளர்க்கும் தாய்மார் (Single Mother)

(v) பல்வேறு துறைகளின் கீழ் தொழில்சார் பயிற்சியினைப் பெற்று அத்தொழிலினூடு முதல்முறையாக சுயதொழில்களில் ஈடுபடும் இளைஞர் யுவதிகள் (ஆரம்ப முதலீட்டிற்காக)

அதற்கமைய, இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்களுக்கு நன்கொடை வழங்குகையில் தேசிய மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்தில் நிறுவனங்களினால் ஒரே சீரான முறையொன்றின் கீழ் செயற்படுத்துவது உசிதமாகும்.ஆகையால் மேற்குறிப்பிட்ட குழுக்கள் தவிர்ந்த ஏனைய நபர்களுக்காக செயற்படுத்தப்படும் நுண் வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் சிறு பரிமாண முயற்சியாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசினால் வழங்கப்படும் பங்களிப்புத் தொகையினை (மாகாண சபைகளினால் செயற்படுத்தப்படுவது போன்றே)வட்டியற்ற / சலுகைக்கடனாக வழங்கப்படும் கடனாக வழங்குவது உசிதமானது என முன்மொழியப்படுகின்றது.

(3) வெளிநாட்டு நிதியுதவி மூலம் செயற்படுத்தப்படும் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்குரிய கருத்திட்டங்களை மிகவும் பொருத்தமான வகையில் திட்டமிடல்

மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள விடயங்களுக்குரிய வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்கள் நடுநிலையாக திட்டமிடப்படுவதோடு முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களை (அவற்றின் மாகாணக் கூறுகள்) செயற்படுத்தும் முழு அதிகாரத்தினையும் மாகாண சபைகளுக்கு வழங்காது அவ்வதிகாரங்கள் உரிய நிரல் அமைச்சுக்களினால் தக்க வைத்துக்கொள்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 2024 ஆம் ஆண்டு வரையில் மாகாண சபைகள் விசேட செலவின அலகுகளாக பெயரிடப்படாமை மற்றும் மாகாண பிரதம செயலாளர்களை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படாமை அதற்கு ஒரு காரணமாக இருந்தது. இவ்வாறாக கருத்திட்டங்களைத் திட்டமிடும் போது மற்றும் செயற்படுத்தும்போது காணக்கிடைத்த முக்கிய பலவீனங்கள் யாவை எனின் குறிப்பிட்ட வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களின் கீழ் செயற்படும் கருத்திட்டங்கள் / செயற்பாடுகள் மாகாண சபைகளின் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடங்காமையும், சில சந்தர்ப்பங்களில் அக்கருத்திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் மாகாண சபைகளினால் அடையாளம் காணப்பட்ட முதன்மையானவையாக இல்லாதிருப்பதும் ஆகும்.

மாகாண சபைகளினைப் போன்றே உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கடந்த காலத்தில் பாதீட்டினால் கிடைக்கப்பெற்ற மூலதன மானிய நிதி ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்ததாகையால் எந்த மூலத்திலிருந்தும் கிடைக்கும் நிதியுதவிகளை மேலதிக விசாரணைகளின்றி பெற்றுக்கொள்வதற்கு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். பெரும்பாலான நிரல் அமைச்சுக்களால் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்கள் உரிய விடயங்களை செயற்படுத்துவதற்காக

மனித வளம் மற்றும் திறனைக் கொண்ட மாகாண சபைகளினால் செயற்படுத்துவதற்குப் பதிலாக நிரல் அமைச்சுக்களினால் தாபிக்கப்பட்ட கருத்திட்ட அலுவலகங்களினால் அக்கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பெரும்பாலும் மாகாண மட்டத்திலும் கருத்திட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டதோடு மாகாண சபை அதிகாரிகளுக்கு மேலதிக கொடுப்பனவொன்றினை வழங்கி அக்கருத்திட்டங்களுக்காக பணியமர்த்தப்பட்டனர். இந்நிலைமையின் கீழ் அதிக நிர்வாகச் செலவினை ஏற்க வேண்டி ஏற்பட்டதோடு, கருத்திட்ட நிறைவின் பின்னர் அதன்மூலம் உருவாகிய சொத்துக்களின் பொறுப்போ அல்லது அக்கருத்திட்டங்களுக்குரிய சேவை வழங்கும் பொறுப்பினை முறையாக ஏற்றுக்கொள்வதற்கு எவரும் காணப்படவில்லை. குறித்த கருத்திட்ட திட்டமிடல் செயற்பாட்டிற்கு ஆரம்பம் முதலே மாகாண சபைகளை இணைத்துக்கொள்ளாமையினால் அதன்மூலம் நிர்மாணிக்கப்பட்ட மூலதன சொத்துக்களை நிர்மாணித்ததன் பின்னர் அவற்றை பராமரிக்கத் தேவையான மனித வளம் பற்றிய சிறந்த திட்டமிடல் காணப்படவில்லை.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்ததன் பிரதிபலனாக உலக வங்கி நிதியுதவியின் கீழ் 2024 ஆம் ஆண்டு வரையில் செயற்படுத்தப்பட்ட "ஆரம்ப சுகாதார அமைப்பு வலுப்படுத்தும் திட்டத்திற்காக" உரிய ஒதுக்கீடுகளை மாகாண சபைகளுக்கு வழங்கி மாகாண சபை அதிகாரிகளினால் மாகாண சபை பொறிமுறையினுள் தடைகளின்றி செயற்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், அக்கருத்திட்டத்தினது விரிவாக்கமொன்றாகிய "ஆரம்ப சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" (Primary Healthcare Service Enhancing Project - PHSEP) அந்நிலைமைக்குப் புறம்பாக திட்டமிடப்பட்டுள்ள காரணத்தினால் நடைமுறை இடர்பாடுகள் பல உருவாகியுள்ளன. அக்கருத்திட்டத்தின் மாகாண கூறு தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அதிக எண்ணிக்கையாக உள்ள சிறு பரிமாண செயற்பாடுகள் சுகாதார அமைச்சினாலேயே தேசிய மட்டத்தில் ஒப்பந்த முகாமைத்துவத்துடன், அனைத்து கொடுப்பனவுகளும் நிரல் அமைச்சுக்களினாலேயே நேரடியாக செய்ய வேண்டிய தேவையுள்ளது. நிரல் அமைச்சுக்களுக்கு சொந்தமற்ற சொத்துக்களின் மீது செயற்படுத்தப்படும் செயற்பாடுகளுக்காக அமைச்சினால் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப சிக்கல்களும் உருவாகியுள்ளன.அந்நிலைமைகளின் கீழ் சில செயற்பாடுகள் உரிய முறையில் செயற்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

